பக்கங்கள்: 17

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 தை 23 திங்கட்கிழமை 06.02.2023 கதிர் 90

**இது ரகசியம் அல்ல!**

தமிழ் அரசுக் கட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் வகையில் நடந்துகொள்பவர்கள் மீது 11ஆம் திகதி செயற்குழுவைக் கூட்டி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்திருந்தார் ☞2

# அரசியல் தீர்வு கிடைக்காவிடின் பறிபோய்விடும் தமிழர் தாயகம்

## தமது பிறந்தநாளில் சம்பந்தன் எச்சரிக்கை

அரசியல் தீர்வு ஏற்படாவிட்டால் எங்களுடைய தாயகம் - சரித்திர ரீதியாக எமது தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த பிரதேசங்கள் படிப்படியாக அபகரிக்கப்பட்டு விடும். எனவே, உடனடியாக அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

- இவ்வாறு வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவருமான இரா.சம்பந்தன். ☞2



# தீர்வுக்கான பேச்சுவார்த்தை வெற்றியுடன் நிறைவேறும்!

## ஜனாதிபதி ரணில் நம்பிக்கை

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கான பேச்சுவார்த்தைகள் வெற்றியுடன் நிறைவேறும்.

– இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசியல் தீர்வு தொடர்பில் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளை ☞2



# தேர்தல் நடக்குமா? இறுதி முடிவு 8 இல்

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடக்குமா, இல்லையா என்ற முடிவை அரசு நாளைமறுதினம் (8 ஆம் திகதி) அறிவிக்கவுள்ளது என்று அரச உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அன்றைய தினம் விசேட அறிவிப்பு ஒன்றை நிதி அமைச்சு நாடாளுமன்றில் விடுக்கவுள்ளது.

அதாவது, தேர்தலுக்காக 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் பணம் ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், தற்போதையை பொருளாதார நிலைமையின் கீழ் தேர்தலுக்கு வழங்குவதற்குப் ☞2

# தமிழர்களின் வாக்குகளை அபகரிக்க ஜனாதிபதி சதி!

## சஜித் அணி குற்றச்சாட்டு



எதிர்காலஜனாதிபதித்தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளை அபகரிப்பதற்காகவே அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் பற்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேசுகின்றார்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார குற்றம் சாட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரிக்கப்படாத நாட்டுக்குள் அதிகாரப் பகிர்வுக்காக அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தேவை என்ற ☞9



வட்டுவாகல் பாலத்தைக் கடந்து முல்லைத்தீவு நகர் நோக்கிச் செல்லும் பேரணி

# பேரணியில் கலந்துகொள்வோருக்காக வடக்கில் இருந்து கிழக்குக்கு பஸ்கள்

வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய எழுச்சிப் பேரணியின் நிறைவு நாள் நிகழ்வு நாளை மட்டக்களப்பில் நடைபெறவுள்ள நிலையில் பேரணியில் வடக்கு மாகாணத்தில் இருந்து கலந்துகொள்பவர்களுக்குரிய பஸ் ஒழுங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் அழகராசா விஜயகுமார் ☞9

# 20 ஆயிரம் வேட்பாளர்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள்

## வெளிவந்தது பரபரப்புத் தகவல்

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் 80 ஆயிரம் வேட்பாளர்களுள் 20 ஆயிரம் வேட்பாளர்கள் பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர்கள் என்று தெரியவருகின்றது.

அவர்கள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களாக இருந்தபோது உள்ளூராட்சி சபைகளுக்குச் சொந்தமான ☞9




# தாவடியில் கோர விபத்து; இளைஞர் ஒருவர் மரணம்

## மற்றொருவர் ஆபத்தான நிலையில்

யாழ்ப்பாணம், தாவடிப் பகுதியில் நேற்று மோட்டார் சைக்கிள் – ஹயஸ் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொரு இளைஞர் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மருதனார்மடம் பகுதியிலிருந்து ☞9



காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சித் தலைவர் மாவை சோ.சேனாதிராசா.

பலரது தூண்டுதலின் பேரில் தான் இந்த நடவடிக்கையை எடுக்க வேண்டியவராக இருக்கிறார் என்பதையும்கூட அவர் அந்தச் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார். அவர் அப்படிச் சொல்லி முழுசாக இரண்டு நாள்கள்கூட ஆகவில்லை, அவரையும் வைத்துக் கொண்டு ஒற்றுமை பற்றி மட்டகளப்பில் பகிரங்கமாக ஒரு விளக்கம், பாடம் நடத்தியிருக்கிறார் சுமந்திரன். மாவைக்கு மட்டுமல்ல, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் சேர்த்தே ஒரு கல்லி இரண்டு மாங்காய்கள் விழுத்தியிருக்கிறார்.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸை விட்டு தந்தை செல்வா பிரிந்து சென்றபோது, அவர் ஒற்றுமைக்குக் குந்தமாகச் செயற்பட்டார் என்று யாரும் அவரைக் குற்றஞ்சாட்டவில்லை என்று ஒரே போடாகப் போட்டார் சுமந்திரன். தந்தை செல்வா அன்றைக்குச் செய்தது தான் ஒற்றுமை ஒற்றுமை என்று சொல்கிறவர்களுக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும் என்றும் சொன்னார்.

அவர் அப்படிச் சொல்கின்றபோது கட்சித் தலைவர் கீழே அமர்ந்து அதைக் கேட்டுக்கொண்டிருந்தார். இரண்டு நாள்களுக்கு முன்னர் ஒற்றுமை ஒற்றுமை என்று அவரும்தான் செய்தியாளர்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தார். அவருக்கும் சேர்த்துத்தான் சுமந்திரன் பதில் சொல்லிக்கொண்டிருந்தார் என்பதை யாராவது அவருக்கு எடுத்துச் சொன்னார்களோ தெரியாது. ஒரு வேளை 11ஆம் திகதி சொல்லக்கூடும்.

தன்னுடைய அந்த உரையிலே சுமந்திரன் சொல்லாமல் சொன்னது, ஒற்றுமை ஒற்றுமை என்று இருந்திருந்தால் இன்று தமிழ் அரசுக் கட்சி என்ற ஒன்றே இருந்திராது, ஆகவே மக்களின் நலன் கருதி தனித்துச் செல்வதும் தேவைதான், தேவைப்பட்டால் ஒருசிலரோடு சென்று தனித்தும் கட்சி அமைக்கலாம் என்று பலவிடயங்களைச் சொல்லியிருக்கிறார். சுமந்திரன் ஒற்றுமைக்குக் குந்தகம் விளைக்கிறார் என்று கட்சித் தலைவரிடம் எடுத்துச் சொன்னவர்கள், சுமந்திரனின் மட்டக்களப்பு உரையை வைத்து அவர் உங்களை எச்சரிக்கிறார் என்றும் கட்சித் தலைவருக்கு எடுத்துச் சொல்வார்களோ தெரியாது.

"1949 டிசெம்பர் மாதம் தமிழ் அரசுக் கட்சி ஒரு தனிக் கட்சியாக மலர்ந்தது. ஒற்றுமை ஒற்றுமை என்று சொல்கிறவர்களுக்கு, தந்தை செல்வா அன்று செய்தது ஒரு பாடமாக இருக்கவேண்டும். அவர் தனி வழியே சென்றார், தனிக் கட்சி தொடங்கினார். ஏன்? தமிழர்களுக்கான விடிவு சுயாட்சி ஆட்சி முறையிலே மட்டும்தான் என்பதை எடுத்துச் சொல்வதற்காக. தன்னோடு சேர்ந்துவந்த ஒருசிலரோடு அன்றைக்கு இருந்த அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸைவிட்டு வெளியேறினார். இன்றைக்கு எவரும் தந்தை செல்வா ஒற்றுமைக்குக் குந்தமாகச் செயற்பட்டார், கட்சியைவிட்டு வெளியேறினார், தனிக் கட்சி தொடங்கினார் என்று குற்றஞ்சொல்லவில்லை. மாறாக அப்படியாக அவர் செய்த அந்த தீர்க்கதரிசனத்தை அனைவருமே புகழ்ந்து பேசுகிறார்கள்" என்பவைதான் அவர் அந்தக் கூட்டத்தில் அச்சொட்டாகச் சொன்ன வசனங்கள்.

அவர் புகழ்பெற்ற சட்டத்தரணி இல்லையா! பொடி வைத்துப் பேசுவதிலும் அவர் கில்லாடி. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூடட்டணியினரும் தமிழ் அரசுக் கட்சிக்குள் உள்ள ஒரு கூட்டம்தான் கூட்டமைப்பின் ஒற்றுமையைக் குலைத்துவிட்டது என்று கூறிவரும் கருத்துக்குப் பதிலளிக்கும் விதத்தில் மாவைக்கும் சேர்த்தே பகிரங்க விளக்கம் கொடுத்திருக்கிறார். இனி ஒழுக்காற்று நடவடிக்கையில் என்ன விளக்கத்தை அவரிடமிருந்து கட்சி கேட்கப்போகிறதோ தெரியவில்லை. அதுதான் ஒற்றுமை பற்றிச் சிந்தித்திருந்தால் உங்களுடைய கட்சியே இல்லை என்று சொல்லியாகிவிட்டதே.... அப்படிப்பட்ட கட்சியின் தற்போதைய தலைவர் ஒற்றுமைக்குக் குந்தகம் வந்துவிட்டது என்று எப்படி தனது உறுப்பினர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கமுடியும்.

அதுவும்போக கட்சியின் செயற்குழு மற்றும் அரசியல் குழுக்களில் தலைவருக்கு பெரும்பான்மை ஆதரவு இல்லை என்பது உள்ளூராட்சித் தேர்தல்களில் சேர்ந்தா தனித்தா போட்டியிடுவது என்கிற விடயத்தில் கட்சி தலைவரின் விருப்புக்கு மாறாக முடிவு எடுத்தபோதே தெரிந்துவிட்டது. அத்தகைய செயற்குழுவில் சுமந்திரன் மீதான ஒழுக்காற்று நடவடிக்கை சாத்தியமா? பொறுத்திருந்து பார்ப்போம்!

ஒற்றுமை, தந்தை செல்வா, தமிழ் அரசுக் கட்சி, தனி வழி என்று சுமந்திரன் சொன்னவைகள் எல்லாம் உண்மைகள்தான். ஆனால் பாதி உண்மைகளையே அவர் சொல்லியிருக்கிறார். அந்தக் கூட்டத்தில் தனக்கு வசதியாக இன்னொரு பாதி உண்மையை அவர் சொல்லாமல் மறைத்துவிட்டார். அவர் சொல்லாமல் விட்ட உண்மை என்பது, 1949இல் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸைவிட்டுப் பிரிந்து சென்ற தந்தை செல்வாதான் 1972ஆம் ஆண்டு அதே காங்கிரஸோடும் இலங்கைத் தொழிலாளர் காங்கிஸோடும் சேர்ந்து பின்னாளில் தமிழர் விடுதலைக் கூட்டணி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்ட தமிழர் கூட்டணியை உருவாக்கினார். அந்தக் கூட்டணியின் செயற்பாட்டுக்காகத் தனது கட்சியின் செயற்பாடுகளை முடக்கி வைத்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலாவது சின்னமாகவும் தந்தை செல்வாவின் ஒற்றுமையின் சின்னமாக இருந்த கூட்டணியின் உதய சூரியன் சின்னம்தான் இருந்து. ஆனந்த சங்கரி அந்தச் சின்னத்தையும் கட்சியையும் தன்னுடையது என்று எடுத்துக்கொண்டபோதுதான் தமிழ் அரசுக் கட்சி மீண்டும் கிளைத்தெழுந்தது. அதுவரையில் தந்தை செல்வா அதனை முடக்கித்தான் வைத்திருந்தார்.

இப்போது மணிரத்தினத்தின் நாயகன் திரைப்படத்தின் இறுதிக் காட்சியில் கதாநாயகனான கமலகாசனைப் பார்த்து அவரது பேரன் கேட்பான் "நீங்கள் நல்லவரா கெட்டவரா?" அதைப் போல தந்தை செல்வா "நல்லவரா கெட்டவரா?" "அவர் ஒற்றுமை வேண்டும் என்றாரா வேண்டாம் என்றாரா?" ஒழுக்காற்றுக் குழுக் கூட்டத்தில் எதைத் தீர்மானிக்கிறார்களோ இல்லையோ தந்தை செல்வா எதைத்தான் தீர்க்கமாகச் சொன்னார் என்பதை முடிவு செய்து சொன்னால் நன்றாக இருக்கும்.

அதைப்போலவே மட்டக்களப்புக் கூட்டத்தில் மற்றொன்றையும் சுமந்திரன் சொல்லியிருந்தார்.

"அன்றைக்கு சமஸ்டியை இகழ்ந்தவர்கள், சமஷ்டியைப் பழித்தவர்கள், 70ஆம் ஆண்டு வரையிலேயும்கூட சமஷ்டியைப் பழித்துப் பேசியவர்கள் தாங்கள்தான் சமடிக்கு உண்மையானவர்கள், நாங்கள்தான் சமஷ்டிக்காகப் போராடியவர்கள் என்று சொல்லுகிற அளவிற்கு சமஷ்டியை இறுக்கி கட்டிப் பிடித்து வைத்திருக்கிறார்கள். பின்னர் எம்மைப் பார்த்து சுட்டுவிரலை நீட்டுகின்றார்கள்.

சுயாட்சி எங்களுடைய கோசம். சமஷ்டி எங்களுடைய அரசியல் சித்தாந்தம். நீங்கள் அதைப் பழித்தவர்கள், அது எடுபடாது என்று சொன்னவர்கள், உங்களுக்கு சம்ஷ்டி என்கிற வார்த்தையை உச்சரிக்க எந்தவிதத் தகுதியும் கிடையாது'' என்றும் தெரிவித்தார். அவர் யாரைப் பெயர் சொல்லாமல் போட்டுத் தாக்குகிறார் என்பது நான் சொல்லாமலேயே வாசகர்களுக்கு விளங்கியிருக்கும்.

எனக்கிருக்கும் கேள்வி எல்லாம், சமஷ்டியை தமிழர்கள் சொல்வதற்கு முன்னர், தந்தை செல்வாவே அதை ஒரு தீர்வாகச் சொல்வதற்கு முன்னர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காதான் இலங்கைக்கு சமஷ்டிதான் தீர்வாக அமைய முடியும் என்று சொன்னார் என்பதை இதற்கு முன்னர் பல தடவைகள் பொது மேடைகளிலும் நாடாளுமன்றத்திலுமேகூட சுமந்திரனே எடுத்துக்கூறியிருக்கிறார். அப்படியென்றால் சமஷ்டியை எங்களுடைய சித்தாந்தம், நாங்கள் அதைப் பேசியபோது தமிழர்கள் அது பற்றிச் சிந்தித்துக்கூடப் பார்க்கவில்லை என்று உரிமை கொண்டாடிக்கொண்டு சந்திரிகா அம்மை யாரும் வருவாரோ?

**- இடிமின்னல் -**

## அரசியல் தீர்வு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திடீர் சுகவீனமுற்று அண்மையில் கொழும்பிலுள்ள தனியார் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன், கடந்த வெள்ளிக்கிழமை (03) வீடு திரும்பினார். நேற்று அவருக்கு 90 ஆவது பிறந்தநாள். இந்நிலையில், அவரை நேற்றிரவு தொடர்புகொண்டு பேசும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவருடன் ஊடகவியலாளர் நடத்திய உரையாடல் வருமாறு:–

ஊடகவியலாளர்:– ஐயா! எப்படி இருக்கின்றீர்கள்?

சம்பந்தன்:– நான் நலமாக இருக்கின்றேன் தம்பி.

ஊடகவியலாளர்:– பிறந்தநாள் வாழ்த்துக்கள் ஐயா.

சம்பந்தன்:– நன்றி தம்பி.

ஊடகவியலாளர்:– ஐயா! இன்றைய நன்னாளில் தமிழ் மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

சம்பந்தன்:– இந்தப் புதிய வருடத்தில் அரசியல் தீர்வு சம்பந்தமான விடயத்தில் நாம் முழு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம்.

அரசியல் தீர்வு தொடர்பான எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

அதற்கேற்ற வகையில் புதிய அரசமைப்பு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும். அதைப் பெறுவதற்கான வாய்ப்பும் இல்லாமல் இல்லை.

எல்லோரும் சேர்ந்து அந்தக் கருமத்தை நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும்.

அரசியல் தீர்வு ஏற்படாவிட்டால் எங்களுடைய தாயகம் – சரித்திர ரீதியாக எமது தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த பிரதேசங்கள் படிப்படியாக அபகரிக்கப்பட்டுவிடும். அதை நாங்கள் அனுமதிக்க முடியாது.

அரசியல் தீர்வு கிடைத்தால் எங்களுடைய பிரதேசங்களின் நிர்வாகங்களை நாங்களே பாரமெடுத்து அவற்றை நடத்தக்கூடிய வழியேற்படும்.

எனவே, அரசியல் தீர்வு என்பது எங்களுடைய நீண்டகால இலக்கு மாத்திரம் அல்ல எங்களுடைய வாழ்வும் அதில்தான் தங்கியுள்ளது – என்றார்.

## தேர்தல் நடக்குமா? ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணம் இல்லை என்றே அந்த அறிவிப்பு அமையப்போகின்றது என்று உயர் மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதனை அடிப்படையாக வைத்து தேர்தல் நடக்குமா, இல்லையா என்ற அறிவிப்பை அரசு நாளைமறுதினம் விடுக்கவுள்ளது.

## தீர்வுக்கான ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றிணைத்தும், கட்சிகளுடன் தனித் தனியாகவும் இருவழிகளில் பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றன.

இந்தப் பேச்சுவார்த்தைகள் வெற்றியுடன் நிறைவேறும் என்றே நான் நம்புகின்றேன்.

வடக்கிலும் பிரச்சினை இருக்கின்றது. கிழக்கிலும் பிரச்சினை நிலவுகின்றது. மலையகத்திலும் பிரச்சினை உள்ளது. தெற்கிலும் பிரச்சினை உண்டு. எனவே, தேசிய இனப்பிரச்சினை தொடர இடமளிக்கக்கூடாது. அந்தப் பிரச்சினை தொடர்ந்தால் நாட்டில் நல்லிணக்கம் ஏற்படாது. எனவேதான் விரைந்து தீர்வைக் காண்பதற்கான பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றன – என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

**'காலைக்கதிர்' பத்திரிகையில் கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

1. உதவி ஆசிரியர்
2. பக்க ஒப்புநோக்குநர்
3. பக்கவடிவமைப்பாளர்
4. செய்தியாளர்கள்
5. இத்துறைகளில் பயிற்சி பெற விரும்புவோர்களும் தொடர்புகொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு -077 307 8799**



# காணிகளை விடுவித்தமை எமக்கு மகிழ்ச்சி; இன்னும் பல இடங்களை விடுவிக்கவேண்டும்



பலாலி மக்கள் கோரிக்கை

பலாலியில் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ள போதும் எங்களுக்கு எந்த வாழ்வாதாரமும் இல்லை, சந்தோமும் இல்லை என்றும் தாங்கள் தொடர்ந்தும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாக பலாலி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாகப் பலாலி வடக்கு பகுதியை சேர்ந்த தேவமலர் என்ற பெண் கருத்து தெரிவிக்கையில் –

அண்மைய நாள்களாக பலாலி பகுதியில் விடுவிக்கப்பட்ட காணிகள் தொடர்பான செய்திகளை நீங்கள் அதிகம் பார்த்திருப்பீர்கள். 1990 ஆண்டு யுத்தம் காரணமாக தனது தாய் இடம் பெயர்ந்து சென்றனர்.

ஆனால் நாங்கள் இங்கே பிறக்கவில்லை. எங்கள் சொந்த நிலத்தை இப்போது தான் நாங்கள் பார்க்கின்றோம். இங்கு இருந்து இடம்பெயர்ந்த பின்னர் எவ்வளவு துன்பங்களை அனுபவித்தோம். தற்போதும் அனுபவித்து வருகிறோம். எந்த ஓர் அடிப்படை வசதியும் இல்லாத முகாம்களில் தங்க வைக்கப்பட்டோம்.

ஒழுங்கான மலசல கூடம் இல்லை. கிணறு இல்லை, முகாம்களின் அருகில் வசிக்கும் மக்களின் வீடுகளில் அவற்றுக்காக சென்றோம். தற்போது கூட இங்கு மலசல கூட வசதி, நீர் வசதி மின் வசதி, இல்லாமல் கடற்கரைகளில் நாங்கள் எமது தேவையைப் பூர்த்தி செய்கிறோம்.

காணிகளை விடுவித்தது எமக்கு மகிழ்ச்சிதான். ஆனால் இன்னும் பல இடங்கள் விடுவிக்க வேண்டியுள்ளது. அந்த மக்களின் சந்தோசங்களையும் நாங்கள் பார்க்க வேண்டும்.

தற்போது காணிகளை விட்டும் எங்களுக்கு எந்த வாழ்வாதாரமும் இல்லை. வீடு சீரமைப்பதாக இருந்தாலும் காணி துப்புரவாக்குவது என்றாலும் நீங்கள் வழங்கும் பணம் போதுமானதாக இல்லை.

இந்த கடற்கரையின் வருமானத்தை நம்பியே நாங்கள் வாழ்கிறோம். எனவே விரைவில் எங்கள் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பக்கூடிய உதவிகளையும் மலசல கூட வசதி, நீர் வசதி, மின்சார வசதிகளையும் மேற்கொண்டு தருமாறு அவர் கோரிக்கை விடுத்தார்.

பலாலி காணி விடுவிப்பதற்காக தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வரும் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் (மெசிடோ) பணிப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ தெரிவிக்கையில் –

இந்த காணி விடுவிப்பில் மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் வெறும் 109 ஏக்கர் காணிகளே விடுவிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் இங்கு வெறும் 80 ஏக்கர் காணிகளே கையளிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

2500 ஏக்கர் காணிகள் உள்ள இடத்தில் வெறுமனே 80 ஏக்கர் விடுவிக்கப்பட்டுள்ளது. காணிகள் தற்போது விடுவிக்கப்பட்ட மக்கள் புன்னகைத்தாலும் அவர்களுக்கு முன் பெரியதொரு போராட்டம் உள்ளது.

கடந்த 30 வருடங்கள் போராட்டம் காரணமாக உள்நாட்டுக்குள் இடம் பெயர்ந்த மக்கள் எந்த ஒரு பொருளாதார வாய்ப்பும் இல்லாத வறுமையில் வாடுகின்ற மக்களுக்கு அரசாங்கம் காணிகளை விடுவித்துள்ளது.

வெறும் காணிகளை மாத்திரம் வழங்கி அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. அதனால் அவர்களுக்கு வீடுகள் உடனே கட்டிக் கொடுக்கப்பட வேண்டும் என்பதுடன் அவர்களுக்கு வாழ்வாதார தொழில் முயற்சிக்கான உதவிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அது மட்டும் அல்லாமல் இந்தப் பகுதியில் மேலும் 2 ஆயிரத்து 500 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் இந்த அரசாங்கம் விடுவிக்க வேண்டியுள்ளது. எனவே, உள்நாட்டில் மக்கள் காணிகள் இல்லாது இருப்பது கொடுமையான விடயம். எனவே இம் முறை ஜெனிவா அமர்வுக்கு முன்னதாக இந்த அரசாங்கம் உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு அமைவாகக் காணிகளை விடுவிக்க வேண்டும்.

நாங்கள் தொடர் போராட்டங்களை மேற்கொண்டதன் அடிப்படையில் இந்த காணி விடுவிப்பை பார்க்கிறோம். ஆனால் வெறுமனே இந்த 109 ஏக்கர் காணி விடுவிப்பில் நாங்கள் திருப்தி கொள்ளவில்லை. 2009 யுத்தம் முடிந்து விட்டது.

யாருக்கு பாதுகாப்பு மக்களின் காணிகளில் உணவகங்கள் கட்டுவதற்கும், விடுதிகள் கட்டுவதற்கும், தென்னந்தோப்பு வைப்பதற்கும் உல்லாச வாழ்க்கை வாழ்வதற்குமா? இந்த மக்களின் காணி.

எனவே மக்களின் காணிகள் அனைத்து விரைவில் விடுவிக்கப்பட வேண்டும் என சிவில் சமூக அமைப்புகள் சார்பாக கேட்டுக் கொள்வதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# முல்லைத்தீவில் 75 பேருக்கு காணி மீளளிப்பு பத்திரங்கள்




முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 75 பயனாளிகளுக்கு 75 ஆவது சுதந்திர தினத்தில் காணி மீளளிப்பு பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கையின் 75 ஆவது சுதந்திரதின நிகழ்வை கொண்டாடும் முகமாக முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 75 குடும்பங்களுக்கு காணி மீள் அளிப்பு பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் 4 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேசசெயலகத்துக்குட்பட்ட 75 குடும்பங்களுக்கு காணி மீள் அளிப்பு பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர்.க.கனகேஸ்வரன் (நிர்வாகம்), மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர். எஸ். குணபாலன் (காணி), உதவி மாவட்ட செயலாளர் லிசோ கேகிதா, மாவட்ட உள்ளகக் கணக்காய்வாளர், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட பிரதம கணக்காளர், மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர், உலக உணவுத்திட்ட மாவட்ட பணிப்பாளர், கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர், மாவட்ட காணி பயன்பாட்டு திட்டமில் கிளையின் உதவிப்பணிப்பாளர், மாவட்ட நிர்வாக உத்தியோகத்தர், புதுக்குடியிருப்பு பிரதேச உதவிப்பிரதேச செயலாளர் மற்றும் உதவித்திட்டமிடல் பணிப்பாளர், பதவிநிலை உத்தியோகத்தர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள், கிராம அலுவலகர்கள், மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கஜமுத்துக்களை விற்க முயன்ற இளைஞன் கல்முனையில் கைது!

யானை கஜமுத்துக்களை இரகசியமாக விற்பனை செய்ய முயன்ற இளைஞனை திருக்கோவில் விசேட அதிரடிப் படையினர் கைதுசெய்துள்ளனர்.

அம்பாறை, கல்முனை புறநகர் பகுதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியொன்றில் சந்தேகத்துக்கிடமாக ஒருவர் நடமாடுவதாக இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து திருக்கோவில் விசேட அதிரடிப் படையினர் அந்த இளைஞனைக் கைதுசெய்தனர். இதன்போது கைதான சந்தேக நபரிடமிருந்து யானை தந்தத்துக்குள் இருக்கின்ற கஜமுத்துக்கள் நான்கை விசேட அதிரடிப்படையினர் மீட்டுள்ளனர்.

கஜமுத்துக்களை வைத்திருந்த காரணத்தால் கைதுசெய்யப்பட்ட இளைஞன் திருகோணமலை கந்தளாய் பகுதியை சேர்ந்த 29 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

மேலும், கைதுசெய்யப்பட்ட நபர்



உள்ளடங்கலாகசான்றுபொருள்கள் யாவும்சம்மாந்துறைபகுதியிலுள்ள ஜீவராசிகள் திணைக்கள பிரிவிடம் மேலதிகவிசாரணைக்காகஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முகப்புத்தக களியாட்ட நிகழ்வு பானந்துறையில் சுற்றிவளைப்பு!

## 41 பேர் சிக்கினர்

பாணந்துறை வடக்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹோரதுடுவ பகுதியில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில் முகப்புத்தக (பேஸ்புக்) நண்பர்கள் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த களியாட்ட நிகழ்வொன்றின் சுற்றிவளைப்பில் 31 ஆண்களும், 10 பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனாட என பாணந்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருள் பாவனையுடன் களியாட்ட நிகழ்வொன்று நடைபெறுவதாக பாணந்துறை வடக்கு பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன் போது கஞ்சா வைத்திருந்த 8 ஆண்களும் 2 பெண்களும், பாலியல் வன்கொடுமை செய்ய முயன்றதாக பெண் ஒருவர் வழங்கிய வாக்கு மூலத்துக்கு அமைவாக 2 பேரும், மேலும் களியாட்ட நிகழ்வில் கலந்து கொண்ட 21 ஆண்களும் 8 பெண்களும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தெஹிவளை, காலி, கலகெடிஹென, பலாங்கொடை, இரத்தினபுரி, கல்கிஸ்ஸ, ஹெட்டிமுல்ல, கொழும்பு 15 மற்றும் களனி ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனவும் அவர்கள் அனைவரும் 20 முதல் 40 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் அனைவரும் பாணந்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பாணந்துறை வடக்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# அரசியல் வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுதல்

**ராஜபக்ஷக்கள் ஆட்சியில் இருந்த வரைக்கும் இலங்கை அதிகம் சீன சார்புடன் செயற்படுவதான தோற்றம் இருந்தது. அதற்கேற்ற வகையில் சீனாவிடமிருந்து அதிக கடன்களைப் பெற்று பெரும் அபிவிருத்தித் திட்டங்களை ராஜபக்சக்கள் செயற்படுத்தினர். அந்தத் திட்டங்களால் இலங்கையர்களுக்கு நன்மைகள் கிடைத்தனவா இல்லையா என்பதற்கு அப்பால், கேட்ட உடனே பெரிதாக எந்தவிதக் கெடுபிடிகளும் நிபந்தனைகளும் இல்லாமல் கடன்கொடுக்கும் தோழனாகச் சீனா நெருங்கி நின்றது.**

**ராஜபக்ஷக்கள் ஆட்சியிலிருந்து அகற்றப்படவேண்டியவர்கள் என்று மேற்குநாடுகள் பலவும் கருதுவதற்கும், இரண்டு தடவைகள் ராஜபக்சக்கள் ஆட்சியிலிருந்து அகற்றப்படுவதற்குப் பின்னணியில் இருந்து மேற்கு நாடுகள் ஆதரவு வழங்குவதற்கும் அவர்களின் சீனாவுடனான தோழமை ஒரு காரணம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.**

**அமெரிக்காவிற்கு இந்த உலகில் சீனாதான் மிகப் பெரிய சவால் என்று அந்த நாட்டு அதிபர் ஜோ பைடன் வெளிப்படையாகவே அறிவித்திருக்கிறார். அதனால் சீனாவை மையப்படுத்திய அமெரிக்காவின் இந்தோ – பசுபிக் கொள்கையில் சீனாவும் அதனோடு நட்புப் பாராட்டும் நாடுகளும் வோஷிங்டனுக்கு மிக முக்கியமானவை. இதனால் இலங்கை மீது அதன் அவதானமும் அழுத்தமும் அண்மைக் காலமாகவே அதிகரித்து வந்திருக்கின்றன.**

**இந்த நிலையில், கொரோனா மற்றும் பொருளாதார நெருக்கடிகளால் கடும் சவால்களுக்குள் சிக்கிக் கொண்டுள்ள இலங்கை, சீன சார்பு நிலையில் இருந்து இந்திய சார்பு நிலைக்குள் அதிகம் அதிகம் நகர்ந்துள்ளதுபோன்ற தோற்றம் இப்போது வெளித் தெரியத் தொடங்கியிருக்கிறது. பொருளாதார நெருக்கடியும் அதிலிருந்து இலங்கை தப்பிப்பிழைப்பதற்கான இந்திய உதவிகளும் இதற்கான பெரும் காரணம்.**

**நேற்று இந்திய கடன் உதவியில் பேருந்துகள் வழங்கப்படும் நிகழ்வில் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய உரை கொழும்பின் இந்தியா நோக்கிய சாய்வின் அதிகரிப்பை உணர்த்துக்கின்றது. அன்றும் இன்றும் இலங்கையின் உயிர்த் தோழனாக இந்தியா இருக்கின்றது என்று அவர் தெரிவித்திருக்கிறார்.**

**அமெரிக்காவின் இந்தோ – பசுபிக் கொள்கையில் அதன் முக்கிய பங்காளியான இந்தியாவை நோக்கி கொழும்பின் சாய்பு அமெரிக்கா நோக்கிய சாய்வாகவுமே நோக்கப்படும். பொதுவாகவே ரணில் மேற்கு நாடுகள் சார்ந்தவர் என்றொரு பார்வையும் ஏற்கனவே உண்டு என்பதால் இந்த மாற்றம் இயல்பானதாகவும் தோன்றக்கூடும்.**

**இந்த மாற்றம் மற்றும் கொழும்பு சிக்கிக்கொண்டுள்ள நெருக்கடி என்பவற்றின் பயனாக தமிழர்களுக்கு ஒரு தீர்வு கிட்டக்கூடிய வாய்ப்புக்களை இந்தியா உருவாக்கக் கூடிய வாய்ப்புக்களும் அதிகரிக்கின்றது என்பதே தமிழர்களின் பக்கமிருக்கும் சாதகம். பூகோள அரசியல் என்று பேசிக்கொண்டிருந்த தமிழ்க் கட்சிகள், தலைவர்கள் இந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.**

**அதேநேரம் 1987இல் நடந்த தவறுகள் மீண்டும் நிகழ்ந்துவிடாத வகையில் நிதானத்துடனும் திறமையுடனும் வாய்ப்புக்களைக் கையாண்டு தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வைப் பெற அனைத்துக் கட்சிகளும் ஒற்றுமையாக முயற்சிக்கவேண்டும். ஒற்றுமை என்பது கட்சிகளுக்கிடையிலான தேர்தல் கூட்டு மட்டுமல்ல, இதுபோன்ற அரசியல் முக்கியத்துவம் மிக்க விடயங்களில் ஒன்றிணைவதுதான் உண்மையான ஒற்றுமையாக இருக்கமுடியும். அதற்கான விருப்பையும், அர்ப்பணிப்பையும் தமிழ்த் தலைவர்கள் தொடர்ந்தும் வெளிப்படுத்தவேண்டியது கட்டாயம்.**

# ஜே.வி.பி. அரசில் புதிய பொறிமுறையுடன் கூடிய அரசமைப்போடு தமிழருக்குத் தீர்வு!

## ரில்வின் சில்வா நம்பிக்கை தெரிவிப்பு



13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பான விவாதத்தைப் பயன்படுத்தி பிரதான அரசியல் கட்சிகள் இனவாதத்தைத் தூண்டிவிடுகின்றன என ஜே.வி.பி. குற்றம் சாட்டியுள்ளது.

ஊடகசந்திப்பில்பேசிய அந்தக்கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இவ்வாறான கருத்துக்கள் ஒரு பொறி என்றும் இதற்கு மக்கள் பலியாகக் கூடாது என்றும் கோரியுள்ளார்.

13 ஆவது திருத்தம் தொடர்பாக ஜனாதிபதி குறிப்பிட்ட அந்தத் தருணம் வரை இந்த நாட்டில் எவரும் இந்தத் திருத்தம் பற்றிக் கவலைப்பட்டதில்லை என்றும் ரில்வின் சில்வா குற்றம் சாட்டியுள்ளார்.

வடக்கிலும் தெற்கிலும் உள்ள மக்கள் தாங்க முடியாத வாழ்க்கைச் செலவு மற்றும் விலைவாசி உயர்வை மட்டுமே பேசிக்கொண்டிருந்தனர் என்றும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் தமது அரசாங்கம் அமைக்கப்பட்டால், தீர்வு பொறிமுறையுடன் கூடிய புதிய அரசமைப்பை கொண்டுவந்து தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு தீர்வுகளை வழங்குவோம் என்றும் உறுதியளித்துள்ளார்.

# அடுத்த தவணை தொடங்க முன் 34,000 ஆசிரியர் நியமனங்கள்

## கல்வி அமைச்சின் அறிவிப்பு



அடுத்த தவணைக்காக மார்ச் மாதம் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர், 26 ஆயிரம் புதிய பட்டதாரி ஆசிரியர்களையும் 8 ஆயிரம் விஞ்ஞான கல்லூரி ஆசிரியர்களையும் இணைத்துக்கொள்ள உள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பிரதமரின் செயலாளர் தலைமையிலான அமைச்சரவை மீளாய்வுக் குழுவொன்றில் அமைச்சர் பிரேமஜயந்த இந்தத் திட்டத்துக்கான விசேட அனுமதியைப் பெற்றிருந்தார்.

அதன்படி 40 வயதுக்குட்பட்ட பட்டதாரிகள் ஆசிரியர் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் என்றும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க பெப்ரவரி 10 வரை அவகாசம் உள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

க.பொ.த மாணவர்களுக்கு விஞ்ஞானம் மற்றும் கணிதம் கற்பிப்பதற்காகவும் அதில் சிலர் உயர்தர மாணவர்களுக்கு பாடங்களைக் கற்பிக்க நியமிக்கப்படுவார்கள் என்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

சமீபத்தில் 12 ஆயிரம் ஆசிரியர்கள் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து வெற்றிடமாக உள்ள ஆசிரியர் பதவிகளுக்கு, தேசிய பாடசாலைகளில் புதிதாக 4 ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களையும் மீதமுள்ளவர்களை மாகாண பாடசாலைகளுக்கும் ஒதுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் ஆசிரியர்கள் அதிகமாக இருந்தாலும், மேல் மாகாணம் உட்பட ஏனைய மாகாணங்களில் உள்ள பாடசாலைகள் தமிழ் ஆசிரியர் பற்றாக்குறையை எதிர்நோக்குகின்றன. தமிழ் ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ள பகுதிகளில் இவர்களை நியமிக்க கல்வி அமைச்சு எதிர்பார்க்கிறது.

# பொலிஸாரின் தேர்தல் காலச் செலவு தேர்தல்கள் ஆணைக்குழு அதிர்ச்சி!

கொழும்பு, பெப். 06

2018 உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு ஆகும் செலவுகளைவிட மூன்று மடங்கு செலவோடு தேர்தல் கடமைக்கான பொலிஸ் திணைக்கள செலவு மதிப்பீடுகள் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு திறைசேரியிடம் ஆட்சேபனைகளை முன்வைக்கவுள்ளது.

ஐந்து வருடங்களுக்கு முன்னர் உள்ளூராட்சித் தேர்தலுக்கான கோரிக்கைக்கு மாறாக மார்ச் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலுக்கு சேவைகளை வழங்குவதற்கு 280 கோடி ரூபா தேவை என பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொடுப்பனவுகள், எரிபொருள் செலவுகள், வாகன வாடகை, தொலைபேசி மற்றும் தகவல் தொடர்பு பொருள்கள், எழுது பொருள்கள் மற்றும் இதர செலவுகளை உள்ளடக்கிய மதிப்பிடப்பட்ட செலவுகள் ஆறு மடங்கு அதிகரிப்பைக் காட்டியுள்ளன என மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த அதிகரிப்புகளில் வாகன வாடகை செலவு 13 கோடியே 8 மில்லியனில் இருந்து 745 மில்லியனாகவும் எரிபொருள் கட்டண மதிப்பீடுகள் 108 மில்லியனில் இருந்து 675 மில்லியனாக அதிகரித்துள்ளது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் மூத்த அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொண்ட மதிப்பீடுகளை விட பொலிஸ் திணைக்களம் அனுப்பிய மதிப்பீடுகள் மிக அதிகமாக உள்ளன என்றும் செலவுகளுக்காக உரிய பத்திரங்களை வழங்கினால் மட்டுமே பணம் செலுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

இதேவேளை தேர்தலுக்கு தயாராவதற்கு தேவையான 10 கோடியில் இருந்து 3 கோடியே 50 லட்சம் மட்டுமே பெற்றுள்ளதாகவும் உரிய நேரத்தில் நிதி கிடைக்காததால் கவலைப்படுவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் மூத்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# மலையகத்துக்கான இந்திய அரசின் உதவியில் 10,000 வீட்டுத்திட்டம் விரைவில் தொடங்கும்!

## ஜீவன் தொண்டமான் உத்தரவாதம்



மலையகத்துக்கான இந்திய அரசின் 10 ஆயிரம் வீட்டுத்திட்டம் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படும். கட்சி, தொழிற்சங்க பேதங்களின்றி பயனாளிகளுக்கு உரிய வகையில் வீடுகள் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படும் என்று இ.தொ.கா கட்சியின் பொதுச்செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அத்துடன், சவாலை எதிர்கொள்ள வேண்டுமெனில் களத்தில் இறங்கியாக வேண்டும். நெருக்கடியை கண்டு பின்வாங்கி நிற்பது ஏற்புடையதல்ல. அதனால்தான் நெருக்கடியான சூழ்நிலையில் அமைச்சு பதவியை ஏற்றேன். மாறாக, பதவி ஆசையில் அல்ல எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

உள்ளூராட்சி சபை தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் ஊவா மாகாணத்திலுள்ள சபை களுக்கு போட்டியிடும் வேட்பாளர்களுடனான கலந்துரை யாடலும், தேர்தல் பிரசார ஆரம்ப கூட்டமும் பண்டார வளை, மாநகர சபை மண்டபத்தில் ஜீவன் தொண்ட மான் தலைமையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடை பெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களிடம் குறை நிறைகளையும், மாற்றுக் கருத்துகளையும் கேட்ட றிந்த அமைச்சர், உடனடி தீர்வுகளையும் ஆலோசனை களையும் வழங்கினார்.

அத்துடன், நாகரிகமான முறையில் தேர்தல் பிரச் சாரத்தை முன்னெடுக்குமாறும் பணிப்புரை விடுத்தார்.

இ.தொ.காவின் உப தலைவரும், ஹல்துமுல்ல பிர தேச சபையின் தவிசாளருமான அசோக்குமார் நிகழ்வுக் கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

இ.தொ.காவின் உப தலைவரும், சர்வதேச விவகாரங் களுக்கான பொறுப்பாளருமான பாரத் அருள்சாமி, ஊவா மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சிவலிங்கம், வேட்பாளர்கள், கட்சி செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டோரும் நிகழ்வில் பங்கேற்றனர்.

ஊவா மாகாணத்துக்கான முதலாவது தேர்தல் பிரசார கூட்டத்தை வெற்றிகரமாக ஆரம்பித்து வைத்து உரையாற் றிய ஜீவன் தொண்டமான் மேலும் கூறுகையில் –

மக்களுக்கு சேவை செய்யவே நான் அரசியலுக்கு வந்துள்ளேன். எனவே, மாலை, பொன்னாடைகள் வேண்டாமென ஏற்கனவே கூறியுள்ளேன்.

ஆகவே எனக்காகக் கொண்டுவந்த மாலைகளை அப்படியே கோவிலுக்கு கொண்டு சென்று சாமிக்கு அணிவித்து ஆசி பெறுங்கள்.

எமது தலைவர் ஆறுமுகன் தொண்டமானுடன் தோளோடு தோள் நின்று பதுளையில் சேவல் கொடியை ஏற்றிய அனைத்து சொந்தங்களுக்கும் நன்றி.

இன்றைய கூட்டத்துக்கு இ.தொ.கா. தலைவர் செந் தில் தொண்டமான், தவிசாளர் ரமேஷ் ஆகியோரும் வரவிருந்தனர். தேர்தல் பிரசாரம் காரணமாக அவர்க ளால் வர முடியாமல் போனது.

நாம் அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகள். ஒரே குடும்பம். ஆகவே, ஒன்றாக முன்னோக்கி பயணிப் போம்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் உள்ளூராட்சி சபை தேர்தல் அவசியமா? அதனால் மாற்றம் ஏதும் ஏற்படுமா? தேர்தல் முடிவுகள் வந்த பிறகு ஜனாதிபதி யாக ரணிலே இருப்பார். பிரதமராக தினேஷ் குணவர்த னவே செயற்படுவார். அமைச்ச ரவையிலும் மாற்றம் வராது.

நான்தேர்தலுக்கு எதிரானவன் அல்லன். தேர்தலொன்று நடை பெறுமானால், அது ஜனாதிபதி தேர்தலாகவே இருக்க வேண்டும்.

கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகிய பின்னர், சஜித், ரணில் என இருவருக்கும் பதவியேற்க அழைப்புவிடுக்கப்பட்டது. ஆனால் சவாலை ஏற்றால் அரசியல் எதிர்காலம் இல்லாது போய்விடும் என்பது இருவருக்கும் தெரியும்.

சஜித் பின்வாங்கினார். ரணில் சவாலை ஏற்றார். நாட்டில் 6 மாதங்களுக்கு முன்னர் இருந்த நிலைமை தற்போது இல்லை. அதேபோல ஒரே இரவில் மாற் றத்தை ஏற்படுத்திவிடவும் முடி யாது. உடைப்பது இலகு. கட்டுவது தான் கஷ்டம்.

இந்தியா உட்பட பல நாடுகள் உதவி வருகின்றன. சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் கிடைப் பதற்கு நிதி உத்தரவாதம் கூட வழங்கப்பட்டுள்ளது.

நெருக்கடியான கட்டங்களில் பதுளை மாவட்டமும் காங்கிரஸை தோளில் சுமந்துள்ளது. அந்த மண்ணை மறக்க மாட்டோம். தேர்தல் பிரசாரத்தை, எவரையும் கொச்சைப்படுத்தும் வகையில் முன்னெடுக்காமல், நாகரிகமாக முன்னெடுங்கள். – என்றார்.

## புதிய நிர்வாகிகள்



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர் வாககுழு தெரிவும் இன்று சபாலிங் கம் அரங்கத்தில் நடைபெற்றது.

தலைவராக மருத்துவர் கோ. றஜீவ்

செயலாளராகதிரு. அ. யசீகரன்

பொருளாளராக திரு. கு. அமரேஸ்

தொரிவு செய்யப்பட்டனர்.




காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 258

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## பரிகார நீதியில் தீர்வுகள்

புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் பொதுச்செயலாளர் செந்திவேல் அவர்களுடன் 'Focus Thamil' ஊடகத்தின் சுவடுகள் நிகழ்ச்சிக்காக நடத்திய செவ்வியின் போது அவர் தூக்கி வாரி போட்ட யதார்த்தமான கருத்து ஒன்றை கூறினார்.

விடுதலைக் குழுக்கள் தோன்றும் காலங்களுக்கு முன்பிருந்தே தமிழ் மக்களிடையே இருந்த சாதிய கொடுமைகளுக்கும், பெண்ணிய அடக்கு முறைகளுக்கும், வர்க்க ரீதியான எதேச்சாதிகாரங்களுக்கும் எதிராக நில மட்டத்தில் கொள்கை பிடிப்போடு



சி.கா.செந்திவேல்

வாழ்ந்தவர் அவர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட்டுக்கோட்டை பிரகடனத்தின் காலத்திலும், பின்பு ஆளுமையில் திகழ்ந்த விடுதலை புலிகளின் அரசியல் போராட்டம் எனப் பலவற்றோடு பயணித்தவர். விடுதலைப் புலிகளின் அரசியல் பாதையை ஆதரிக்காவிட்டாலும் மக்களோடு இருந்து செயல்பட்டவர். அறகலய போராட்டக்காரர்களுடனும் கொள்கை ரீதியாக இணைந்து செயல்பட்டு, காலிமுகத்திடலில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வார்ப்பதில் பாரிய பங்கு தந்தவர்.

நாட்டில் – முக்கியமாக தமிழ் பகுதிகளில் – மக்கள் இருக்கும் நிலையைப் பார்த்தால் முன்னைய நாள்களில் குடும்பங்கள் அந்நியோன்னியமாக, சமூக விழுமியங்களில் வாழ்ந்த முறைமை எல்லாம் சிதறி, குடும்பங்களின் அங்கத்தினர்கள் எல்லோருமே தனித்தனி வட்டங்களில், மொபைல் போன், மின்னஞ்சல்கள் என வாழ்கிறார்கள். வெளிநாடுகளில் இருந்து குடும்பத்துக்காக என்று அனுப்பப்படுகின்ற பணமே இவற்றை உருவாக்குகிறது. கோவில்கள் இருக்கலாம், அங்கு பக்திப் பரவசத்திற்காக திருவிழாக்கள் வெளிநாட்டு காசுகளில் நடத்தலாம், ஆனால் பாரிய செலவுகளில் கோபுரங்களும், வசந்த மண்டபங்களும் கட்டுபவர்கள், பக்கத்திலே சோற்றுக்குக் கையேந்தி, வாழ்வாதாரமில்லாதவர்களையும் ஓரளவு பார்க்க வேண்டும் என்கிறார்.

நாளைக்கு அங்கிருக்கும் மக்கள் யாபேரும் எது வித தடைகளுமின்றி ஐரோப்பா, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் சென்று குடியேறலாம் என்று அறிவிப்பு வந்தால் யாவருமே கிளம்பி விடுவார்கள். தமிழ்ப் பகுதிகளில் யாரும் இருக்க மாட்டார்கள். அது நிதர்சனம். நாளைக்கு தமிழ் ஈழம் கிடைத்தாலும் எவரும் திரும்ப மாட்டார்கள். ஆதலால் இந்த அரசியலால் என்ன பயன் என்ற கேள்வியை எழுப்பினார்.

இதில் எந்த மக்களுக்காக இந்த அரசியல் என்பது அவரது கேள்வி.

கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை முள்ளிவாய்க்காலை அடைந்து, தொடரும் நில அபகரிப்புகளாலும், கலாச்சார விழுமியப் பாதிப்புகளாலும், அடக்கு முறைகளாலும் நிலைமை மோசமாகிறது என பல தடவைகள் பதிந்து இருக்கிறேன். பேரினவாதத்தின் சிந்தனைகளில் தமிழ் மக்கள் அழிக்கப்பட்டு, அடித்து விரட்டப்பட்டு, அவர்களின் இருப்பிடங்கள், வாழ்வியல்கள் தங்களது ஆதிக்கத்தில் இருக்க வேண்டும் என்ற எண்ணமே வேரூன்றி இருக்கின்றது.

இனப்படுகொலையின் வேதனைகள் ஒவ்வொரு தமிழனையும் – ஈழத் தமிழனை மட்டுமல்ல, உலகளாவிய தமிழ் மக்கள் அனைவரையும் – பாதித்துள்ளது. இதனைப் போன்ற இனவழிப்புகள் கம்போடியா, வியட்நாம், பங்களாதேஷ், பர்மா, சீனா என ஆசிய பகுதிகளிலும், நான் முன்னர் பதிந்தபடி ஆப்பிரிக்க நாடுகள் பலவற்றிலும் நடந்தவைதான். நடந்து கொண்டே இருக்கின்றன. இவர்களுக்கு கிடைத்த செய்நீதி என்ன?

துருக்கியின் ஓட்டோமன் (Ottomon) பேரரசு கோலோச்சிய காலங்களில் முதலாம் உலகப் போரின் இடையே அவர்களின் படைகள் ஆறு லட்சம் முதல் 15 லட்சம் வரை ஆர்மேனிய மக்



பேராசிரியர் சாயஸ்

களைக் கொன்றும், மதம் மாற்றியும், நாடு கடத்தியும், இனப்படுகொலை செய்தார்கள். இந்த இனப்படுகொலைகள் நடந்தவை என்று ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், சட்டரீதியாக சர்வதேசமும் ஏற்று, துருக்கியும் ஆமோதித்து, அவை நடந்த நூறு வருடங்களின் பின் ஆர்மேனிய இன்று உலகவரைபடத்தில் நாடாக இல்லை. இதைப் போல பல உண்டு.



லோரன்ஸோ பியறிற்றோ

### பரிகார நீதிக்கான பார்வைகள்

ஆர்மேனிய மக்களது இனப்படுகொலை போன்று துருக்கியின் ஓட்டோமன் பேரரசு ஒரு சீரான, ஒரு தன்மையுள்ள மக்கள் தங்கள் அரசுக்குள் வாழ வேண்டும் என்ற நினைப்பில் 1914 – 1922 காலப்பகுதியில் அதனது பிரதேசத்தில் வாழ்ந்த கிரேக்க மொழி பேசிய கிறிஸ்தவ ஓட்டோமன் பிரஜைகளை இனப்படுகொலை செய்தது. அதில் 15 லட்சம் மக்கள் மடிந்தனர் எனக் கணக்கெடுக்கப்பட்டது.

துருக்கி பின்னர் தங்களிடைய வாழ்ந்த குர்தீஸ் மக்களின் சுயாட்சி போராட்டத்தை அடக்குவதற்காக 1930 இல் 40 ஆயிரம் பேருக்கு மேற்பட்டோரை இனப்படுகொலை செய்தது.

துருக்கி, ஈராக், ஈரான், சிரியாவில் வாழும் குர்தீஸ் மக்கள் இன்றும் தங்கள் சுயநிர்ணயத்துக்கும் தனி நாட்டுக்காகவும் போராடுகிறார்கள்.

அவர்களின் கிளர்ச்சியை அடக்க சதாம் உசேன் 1970 இல் ஒரு லட்சத்து 82 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குர்தீஸ் மக்களை இனப்படுகொலைக்கு ஆளாக்கினார்.

சதாமை கவிழ்ப்பதற்கு அமெரிக்கா படை அனுப்பிய போது சதாமினது ஆட்சிக்கு எதிரான குர்தீஸ் மக்களுக்கு சுயாட்சிக்கு வழிவகுப்பதாக உத்திரவாதம் அளித்து, அவர்களையும் போரில் பங்காளிகளாகச் சேர்த்தாலும், எனினும், போரின் முடிவில் அமெரிக்கா அதனது உலக அரங்கின் படங்களுக்காக ஈரானையும் துருக்கியையும் பகைத்துக் கொள்ள விரும்பாமல், குர்தீஸ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலைகளையும் அவர்களின் சுய நிர்ணய விவகாரத்தையும் ஆறப் போட்டுள்ளது.

தமிழ் மக்கள் அனுபவித்த இனப்படுகொலையின் வலி அவர்களுடையது. அவர்கள் அதனை புறம் தள்ள முடியாது. அதன் வலிகளுடனையே அவர்களது வாழ்வும் போராட்டமும் தொடரும். ஆயினும் உலக சரித்திர வரலாறுகளிலும், புவியியல் அரசியல் நடப்புகளிலும் இங்கு நடந்த இனப்படுகொலை அமெரிக்கா சார்பான நாடுகளின் உலக அரங்கில் நடவடிக்கைகளுக்கு ஒத்துவரும் என கணிக்கப்பட்டால் மட்டுமே பரிகார நீதியின் தீர்வுக்கு வழிகிட்டும்.

முன்னர் விளக்கியவாறு கிழக்கு ஐரோப்பாவின் நிலப்பரப்புகளை தங்களது அதிகாரங்களுக்கு உட்பட்ட நாடுகளாக்க வேண்டும், அதனால் சோவியத் அரசு பலவீனப்பட வேண்டும் என்ற முனைப்பே ஐரோப்பிய ஒன்றியத்தின் படைகள் (NATO) உள்ளிட்டு அவை உருவாக்கின என்பதையும், கொசோவோ (Kosovo)வில் நடப்பது தங்களுக்கும் சாத்தியப்படும் என இங்கு (இலங்கையில்) முன்னெடுக்கப்பட்ட பிரசாரங்களும் அழுத்தங்களும் தமிழ் மக்களுக்கு கை கூடவே இல்லை என்பதையும் பதிந்திருந்தேன்.

பூகோள அரசியலில் அவை நிதர்சனமானவை. இனப்படுகொலை நடந்தது என்பது வேறு. ஆனால் தற்சமய புவியியல் அரசியல் துழாவல்களில் ஐ.நாவினால் அது சட்ட ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் அடிப்படையில் பரிகார நீதி கிடைத்துவிடும் என்பது யதார்த்தமானது அல்ல. தமிழ் மக்கள் அதற்கான அழுத்தங்களை கொடுக்க வேண்டும். ஐ.நாவின் பிரதிநிதிகளின் மனோபாவங்கள் எப்படி உள்ளன என கலாநிதி சாய்ஸின் அபிப்பிராயங்களை பதிந்திருந்தேன்.

அதுபோலவே புத்திஜீவி லோரன்ஸோ பியறிற்றோ (Lorenzo Fiorito) ஆற்றிய உரை கனடிய தமிழ் மக்களால் பரவலாக்கப்பட்டுள்ளது. அவர் கூட, மனித உரிமை மீறல்களான போர்க் குற்றங்கள், மனிதாபிமா




சதாம்

னத்துக்கு எதிரான செய்கைகள் இனப்படுகொலை ஆகியவை சர்வதேச சட்டங்களால் குற்றங்களாகக் காணப்பட்டாலும், அந்தச் சட்டம் மாத்திரமே அதனிலிருந்து தீர்வுகள் பெற்றுக் கொள்வதற்கு போதுமானதல்ல, நாடுகள் அதற்கு ஆதரவும் அழுத்தங்களும் தந்து, நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், அதற்கான முயற்சிகள் எவை என்ற யதார்த்தத்தையும் தெரிவிக்கிறார்.

எனவே சட்டத்தில் இருப்பதனால் பரிகாரநீதி உடனடியாகவே தரப்பட்டு விடும் என்ற உணர்வுகளில் இருந்து தமிழ் மக்கள் விடுபட்டு, அந்த அரசியலின் நடப்புக்களின் தன்மைகளை அறிந்து, சர்வதேசங்களுடன் இணைந்த வழிகளில் சட்டரீதியாக பயணிப்பது அவசியம். அதை விட்டு பிடிவாதங்களில் நடத்தப்பட்ட அரசியலின் வழிகளில்தான் பாதைகள் சமைக்கப்படும் என தீர்மானிப்பது விளையாத காட்டிற்கு எருவூட்டுவதாகத்தான் முடியும்.

(வளரும்...)

காலைக்கதிர்
Kalaikkathir



# கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





## FULL OPTION

### MAIN DIHES

- Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
- Chiken Fried Rice with Vegetable - 1100/=
- Kothu Rotty With Vegitable in Indian Style

### DESSERT

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

SPECIAL MENU PACKAGE

### BEVERAGES

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர் Kalaikkathir

# 13 அரசமைப்பு தமிழர்களின் சவக்குழி அந்த சாவுப் பொதியை நிராகரிப்போம்!

## முன்னணி செயலாளர் கஜேந்திரன் போர்க்கொடி



இந்தியா தனது நலனுக்காக இலங்கையுடன் சேர்ந்து தமிழ் மக்கள் மீது திணித்த கூட்டு சதியே 13 ஆவது திருத்தச்சட்டம் இது தமிழர்களுக்கு சவக்குழி; சாவுப் பொதி இதை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம்.

தமிழ்த் தேசமும் இறைமையும் சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி தீர்வு எட்டப்படும் வரை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்த மக்களுடன் தொடந்து குரல் கொடுக்கும் தென்தமிழீழ மண்ணில் நின்று கொண்டு இந்த மக்கள் செய்யும் பிரகடனம் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்லவராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

பெப்பிரவரி 4 கரிநாள் ஒற்றையாட்சியையும் 13 ஆவது திருத்தத்தை ஒழிப்போம் என்ற தொனிப் பொருளில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

பிரித்தானியர்களால் சுதந்திரம் வழங்கப்பட்ட நாள்தமிழர்கள்தம்மைத்தாமே ஆழுகின்ற இறைமை அதிகாரத்தை சிங்கள தேசத்திடம் தாரைவாத்து 1948 ஆண்டு இதே நாளில் ஆங்கிலேயர் சிங்கள பேரின வாதத்திடம் அடிமைப்படுத்திச் சென்று 75 ஆண்டுகளாக இந்த நாளை தமிழர்கள் இருண்ட கரிநாளாக தொடர்ச்சியாக கடைபிடித்து வருகின்றனர்.

தமிழர்கள் சதந்திரமாக இந்தத் தீவில் வாழவேண்டுமாக இருந்தால் வடக்கு, கிழக்கு தமிழர்களின் தாயகம் அங்கீகிக்கப்படவேண்டும். தமிழர்களுடைய தேசமும் அதன் இறைமையும் அங்கீகரிக்க வேண்டும் சுயநிர்ணய உரிமையுடனான சமஷ்டி தீர்வு வேண்டும். ஒரு புதிய சமஷ்டி அரசமைப்பு இலங்கைக்குக் கொண்டு வரப்படவேண்டும் என்பது 75 வருடங்களாகத் தமிழர்களின் கோரிக்கையாக இருக்கின்றது.

இலங்கைக்கு 1948 சுதந்திரம் கிடைக்கும் போது இருந்த ஒரே ஒரு தமிழ் கட்சியான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி. முதல் முதல் நடந்த தேர்தலிலே ஒற்றையாட்சி அரசியல் யாப்பை நிராகரித்து தேர்தல் விஞ்ஞாபனத்தில் போட்டியிட்டு அதில் வெற்றி பெற்றினர். அன்றைய நாளில் இருந்து இலங்கையில் 1948 ,72, 78 , நிறைவேற்றப்பட்ட ஒற்றையாட்சி அரசியல் யாப்பை தமிழர்கள் நிராகரித்து வந்துள்ளனர்.

பின்னர் தமிழர்கள் ஆயுதம் ஏந்தி தமது தேச அங்கீகாரத்துக்காகப் போராடியுள்ளனர். 2009 மே 18 ஆம் திகதிவரைக்கும் தமிழர்கள் தங்கள் தேசத்தின் இறைமையும்; சுயநிர்ணய உரிமை என்ற அங்கீகாரத்துக்காகத் தியாம் நிறைந்த உயிர் கொடுக்கின்ற புனித போராட்டத்தை நடத்திவந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பினர் அந்த தலைமைத்துவத்தை தாம் பாளத்தில் வைத்துக்கொண்டு தமிழர்களின் தலைமைத்துவத்தைப் பெற்றுக்கொண்டனர்.

2009 மே 18 ஆம் திகதி போராட்டம் மௌனிக்கப்பட்ட பிற்பாடு வந்த சுதந்திர தினங்களிலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், அதன் பேச்சாளர் எம்.சுமந்திரனும் அதில் கலந்து கொண்டு தமிழர் தேசத்தில் புலிகள் அழிக்கப்பட்டதை சிங்களவர்களுடன் சேர்ந்து ஒரு வெற்றி விழாவாக கொண்டாடினார்கள். தமிழ் மக்களைக் கொன்ற ராஜபக்ஷக்களுக்கு நாடாளுமன்றத்தில் பாராட்டு தெரிவித்தனர்.

இன்று அதே தரப்பினர் மக்களால் இனங்காணப்பட்டு மக்கள் முன்னே வரமுடியாத நிலையில் இன்று கூட்டமைப்பு என்றதை தொலைத்துவிட்டு தனித்தனி அடையாளத்துடன் மக்கள் முன்னல் நின்று கொண்டிருக்கின்றனர்.

இலங்கைத் தீவில் சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்துவதற்கும் இந்தியாவினுடைய நலன்கள் மற்றும் அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளின் பூகோல நலன்களை பேனுவதற்கு 1987 இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு என்ற பெயரிலே இந்தியாவும் இலங்கையும் கூட்டுசதி செய்து 13 திருத்தச் சட்டத்தை உருவாகினர்.

அதன் மூலம் மாகாணசபை கொண்டுவரப்பட்டது. அதன் அதிகாரம் முழுவதும் ஜனாதிபதியிடம் இருக்கின்றது. அவரால் நியமிக்கப்பட்ட ஆளுநரிடம் இருக்கின்றது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சருக்கோ அமைச்சர்களுக்கோ எந்த அதிகாரமும் இல்லை. மாகாணசபைக்கும் எந்த அதிகாரமும் இல்லை என்பதுடன் காணி பொலிஸ் அதிகாரம் கிடையாது என்பதுடன் ஜனாதிபதிக்கு முழு அதிகாரமும் என உச்சநீதிமன்றம் 30 தீர்ப்புக்களில் தெரிவித்துள்ளது.

2016 ஜனவரி மாதத்தில் இருந்து 2018 டிசெம்பர் மாத்துக்குள் ரணில் மைத்திரி நல்லாட்சி காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற பெயரிலே ஓர் அரசியல் அமைப்பு வரைவை உருவாக்கினர் அந்த அரசமைப்பில் இரா. சம்மந்தன், பௌத்த மதம் முதன்மை மதம் என எழுத்துமூலமாக கையொப்பம் வைத்துள்ளார். இது தமிழர்களுக்கு செய்யப்பட்ட மிகப் பெரும் துரோகம்.

அதேபோல வடக்கு, கிழக்கு இணைப்பைக் கைவிடுவதற்கும் சமஷ்டியை கைவிடுவதற்கு இணங்கியுள்ளதுடன் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை எங்கள் மீது திணிக்கின்ற ஒற்றையாட்சி அரசமைப்பை கொண்டுவருவதற்கு இனங்கியுள்ளனர். அதை நாங்கள் இன்று நிராகரிக்கும் வகையில் இந்த பேரணியை செய்துள்ளோம்.

இந்த 13 ஆவது திருத்தச் சட்டத்தை தீர்வாக வலியுறுத்தி தமிழரசு கட்சி தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் விக்கினேஸ்வரன் அணியினர் நிற்கின்றனர். ஏனையவர்கள் அரசாங்கத்துடன் நின்று கொண்டு ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்.

இன்று அவர்களும் சுதந்திர தின கரிநாள் என்ற போர்வையில் நீலிமுதலிக்கண்ணீர் வடிக்கின்றனர் ஏனென்றால் ரணில் விக்கிரமசிங்கவுடன் சேர்ந்து ஒற்றையாட்சிக்குள் 13 ஏற்றுக் கொள்ளத் தயாராகி விட்டனர். மக்கள் தங்களை இனங்கண்டு கொள்ளக் கூடாது என்பதற்காக ரணிலுக்கு எதிர் போல் நாடக மாடிக் கொண்டுள்ளனர். இதனை மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

கடந்த நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ஓர் அழைப்பு விடுத்தார். நான் இனப்பிரச்சினையை ஓராண்டில் தீர்க்கப் போவதாகவும் தமிழ் தலைவர்கள் ஒத்துழைக்குமாறு கேட்டிருந்தார். இதன்போது ரணிலுக்கு பதிலளித்த எம். சுமந்திரன், இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எடுக்கின்ற முயற்சியை வரவேற்பதாகவும் 2016 நல்லாட்சி காலத்தில் வரையப்பட்ட அரசமைப்பின் அடிப்படையில் தீர்வு கானமுற்பட்டால் ஓராண்டு தேவையில்லை 3 மாதத்தில் தீர்வு வந்துவிடும் என்றார்

இந்தியா தனது பிராந்திய நலன்களை பேணுவதற்காக தமிழர்களை 13 ஏற்றுக் கொள்ளுமாறு நிர்ப்பந்தித்து தமிழர்களை அழிக்கின்ற நடவடிக்கைக்கு தொடர்ந்தும் முயற்சி செய்து கொண்டிருக்கின்றது. தமிழர்களிடம் வாக்குகளை பெற்று கொண்டு பிரதிநிதிகள் என்று சொல்லுகின்றவர்கள் இந்தியாவிடம் சலுகைகளைப் பெற்றுக் கொண்டு 13 ஆவதை நடைமுறைப்படுத்தல் என்ற போர்வையிலே ஒற்றையாட்சியை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கின்றனர்.

இதனை மக்களும் புரிந்துகொள்ளவேண்டும் பல்கலைக்கழக மாணவர்கள் இதற்குப் பலியாக கூடாது விழிப்படைய வேண்டும் என்பதுடன் ஒற்றையாட்சிக்கு உட்பட்ட எந்த வொரு தீர்வையும் ஏற்றுக் கொள்ள முடியாது. - என்றார்.

# இரட்டை பிரஜா உரிமை விவகாரம் நீதிமன்றை நாடுவோம் - பவ்ரல்

நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இரட்டை பிரஜா உரிமை உள்ளவர்கள் தொடர்பான தகவல்களை வெளியிடுவது தொடர்பான நிலைப்பாட்டை இரண்டு வாரங்களுக்குள் அறிவிக்கவேண்டும் என தகவல் அறியும் ஆணைக்குழு குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி உள்ளது.

அதன் பிரகாரம் கிடைக்கும் பதிலுக்கமைய நீதிமன்ற உதவியை நாடுவோம் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ராஹேன ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

இரட்டை பிரஜா உரிமை உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பாக தகவல் அறியும் ஆணைக் குழுவுக்குவுக்கு பவ்ரல் அமைப்பால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மேன்முறையீடு தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இரட்டை பிரஜா உரிமை உள்ள உரிப்பினர்கள் தொடர்பாகக் குடிவரவு குடியகல்வு திணைக்களம் அதுதொடர்பாக வழங்குமாக இருந்தால் அது தொடர்பில் நீதிமன்றத்தின் உதவியை நாடுவோம். இதுதொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக தகவல் அறியும் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்திருந்த மேன்முறையீடு கடந்த வாரம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

இரட்டை பிரஜா உரிமை உள்ளவர்கள் தொடர்பான தகவல்களை வழங்குவது சம்பந்தமாகத் தங்களின் நிலைப்பாட்டை இரண்டு வாரங்களுக்குள் அறிவிக்க வேண்டும் என ஆணைக்குழுவால் குடிவரவுகுடியகல்வு திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதன் பிரகாரம் அந்த அதிகாரிகளால் வழங்கப்படும் பதிலுக்கு அமைய அடுத்தகட்ட நடவடிக்கை எடுப்போம்.

அத்துடன் இரட்டை பிரஜா உரிமை உள்ள வர்கள் நாட்டில் இருக்கின்றமை தொடர்பில் எந்த பிரச்சினையும் இல்லை. ஆனால் அவர்கள் நாட்டில் தீர்மானம் எடுக்கும் இடங்களில் பதவி வகிக்கின்றமை பொருத்தமில்லை.

அது எமது நாட்டின் இறையாண்மைக்கு பாதிப்பாகவும் அமையும். குறிப்பாக நாட்டில் சட்டம் இயற்றும் நாடாளுமன்றத்தில் இவர்கள் இருந்த, சட்ட மூலம் அனுமதிக்கப்படும்போது, அவர்கள் நாட்டுக்கு பூரண நம்பிக்கையும் செயற்படுமா என்ற சந்தேகம் எழுகிறது. - என்றார்.

### உலக இரும்பரசன் எனப் போற்றப்படும்

# சாண்டோ சங்கரதாஸின் 120 ஆவது பிறந்த தினம்

உலக இரும்பரசன் எனப்போற்றப்படும் பேராசிரியர் சாண்டோ சங்கரதாஸின் 120 ஆவது ஜனனதினம் மட்டக்களப்பில் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) சாண்டோ சங்கரதாஸ் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவரும் போதனாசிரியருமான திருச்செல்வம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

அதன்படி மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட நொச்சிமுனையில் உள்ள அன்னாரது உருவச் சிலைக்கு நேற்றுக் காலை மாலை அணிவித்து ஜனனதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதேவேளை பேராசிரியர் சாண்டோ சங்கரதாஸ், இலங்கையில் மட்டுமன்றி இந்தியா மற்றும் உலகநாடுகள் பலவற்றில் சாண்டோ கலையின் மூலம் பல்வேறு வீர தீர செயற்பாடுகளை முன்னெடுதுவந்துள்ளமையால் இவருக்கு பிரித்தானிய இளவரசியால் 'இரும்பு மனிதர்' என்ற பட்டமும் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் அவரது வழித்தோன்றல்களாக சாண்டோ கலையைத் தொடர்ந்தவர்கள், தொடர்ந்து வருபவர்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

## தமிழர்களின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைப்பாட்டில் நாம் இருக்கின்றோம். 13 ஐ நடைமுறைப்படுத்துவதற்கு முன் அந்த 13 இற்குள் இருக்கின்ற மாகாண சபைகளுக்கான தேர்தலை முதலில் நடத்த வேண்டும். நீண்ட காலமாக அந்தத் தேர்தல் நடத்தப்படாமல் இருக்கின்றது.

எதிர்கால ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காக – அவர்களின் வாக்குகளை அபகரிப்பதற்காகவே 13 ஆவது திருத்தச் சட்டம் பற்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேசுகின்றார். அதற்கு நாம் எதிர்ப்பு. இதற்காகத்தான் நாம் கடந்த சர்வகட்சிக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. – என்றார்.

## பேரணியில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

'இலங்கையின் சுதந்திர நாள் – தமிழர்களுக்குக் கரிநாள்' என்ற தொனிப் பொருளில், தமிழர்களின் அபிலாஷைகளான சுயநிர்ணயம், தமிழ்த் தேசியம், மரபுவழித் தாயகம் ஆகியவற்றைச் சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்தும் வகையில் வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி இடம்பெறும் எழுச்சிப் பேரணியின் நிறைவு நாள் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது.

அந்த எழுச்சி நிகழ்வுக்கு வடக்கு மாகாணத்தில் இருந்து கலந்துகொள்பவர்களுக்குரிய பஸ் ஒழுங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் இருந்தும், கிளிநொச்சி – பரந்தன் பஸ் நிலையம் மற்றும் கிளிநொச்சி – புதிய பஸ் நிலையத்தில் இருந்தும், முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் பஸ் நிலையங்களில் இருந்தும் பஸ்கள் செல்லவுள்ளன.

அந்தந்த மாவட்டங்களில் இருந்து செல்லவுள்ளோர் அருகிலுள்ள பஸ் புறப்படும் இடங்களுக்குக் குறித்த நேரத்துக்குச் சென்று பஸ்ஸில் தங்களது பயணத்தைத் தொடர முடியும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் 0774819490 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் – என்றுள்ளது.

## 20 ஆயிரம் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடைகளை உறவினர்களுக்கு வாடகைக்கு விட்டமை, முறையற்ற விதத்தில் ஒப்பந்தங்களை வழங்கியமை, அரச சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமை, தரமற்ற பாதைகளை நிர்மாணித்தமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

தென்னிலங்கை வார இதழ் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

## தாவடியில் கோர ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொக்குவில் நோக்கி 3 மோட்டார் சைக்கிள்கள் மிக வேகத்தில் பயணித்தன என்றும், அதில் இரண்டாவதாக வந்த மோட்டார் சைக்கிள் யாழ்ப்பாணத்திலிருத்து மருனார்மடம் நோக்கிப் பய ணித்த ஹயஸ் வாகனத்துடன் நேருக்கு நேர் மோதி விபத்து இடம்பெற்றது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் யாழ். ஓட்டுமடம் பகுதியைச் சேர்ந்த அனுஜன் (வயது 19) என்ற இளைஞர் உயிரிழந்த நிலையில், ஜெயசீலன் ரகுசான் (வயது 17) என்ற இளைஞர் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்த இளைஞருக்குச் செயற்கைச் சுவாசம் வழங்கப்பட்டு வருகின்றது எனக் கூறப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622






நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 22 ஞாயிற்றுக்கிழமை 05.02.2023 கதிர் 341

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் நீரில் மூழ்கி மரணம்

### சிலாபத்தில் சோகம்

சுற்றுலா சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் சிலாபம் – முகத்துவாரத்தில் நீராடச் சென்ற நிலையில் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பு பிரதேசத்தில் வசிக்கும் 7 வயது மகள், 6 வயது மகன் மற்றும் 35 வயதுடைய தந்தை ஆகியோரே 2

# மஹிந்த மீண்டும் பிரதமராகின்றாரா?



## ஆளும் தரப்புக்குள் வெடித்தது சர்ச்சை

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரான மஹிந்த ராஜபக்சவை மீண்டும் பிரதமராக்குவது தொடர்பில் ஆளும் தரப்புக்குள் இருவேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

பிரதமர் பதவியில் இருந்து விலகுவதற்குத் தினேஷ் குணவர்த்தன தயார் நிலையில் இருக்கின்றார் எனவும், எனவே, மஹிந்தவை மீண்டும் பிரதமராக்க வேண்டும் எனவும் மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் வலியுறுத்தியுள்ளனர்.

எனினும், அரசுக்கு ஆதரவு வழங்கும் பங்காளிக் கட்சிகள் உட்பட மேலும் சில தரப்புகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

தினேஷ் குணவர்த்தனவை நீக்கிவிட்டு, மஹிந்தவைக் கொண்டுவந்தால் தேவையற்ற அரசியல் குழப்பம் உருவாகக்கூடும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். இதனால் பிரதமர் விவகாரம் தொடர்பில் ஆளுங்கட்சிக்குள் குழப்ப நிலை உருவாகியுள்ளது.



## கோடீஸ்வர வர்த்தகர் இன்று சடலமாக மீட்பு

இலங்கையின் ஒபெக்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், கோடீஸ்வர தொழிலதிபருமான ஒனேஷ் சுபசிங்க 2

# இலங்கையின் உயிர்த்தோழன் அன்றும் இன்றும் இந்தியாவே!

## பஸ்கள் கையளிப்பு நிகழ்வில் தூதுவரிடம் ரணில் தெரிவிப்பு

இலங்கை இடர்களை எதிர்நோக்கும் சந்தர்ப்பங்களிலும் சரி, சாதாரண நிலைமைகளிலும் சரி பெருமளவு உதவிகளை இந்தியா வழங்கி வருகின்றது. அன்றும் இன்றும் இலங்கையின் உயிர்த்தோழனாக இந்தியா இருக்கின்றது. 8



## ராஜபக்சக்கள் எவரும் பங்கேற்காத நிகழ்வு



கொழும்பு – காலிமுகத்திடலில் நேற்று நடைபெற்ற 75 ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வில் ராஜபக்ச குடும்பத்தில் எவரும் பங்கேற்கவில்லை.

சுதந்திர தின நிகழ்வின் நிகழ்ச்சி நிரலில் முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச, 2

## போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் தாக்குதல்: முதற்கட்ட அறிக்கை நாளை ஆணைக்குழுவிடம்

கொழும்பு – மருதானை எல்பின்ஸ்டோன் திரையரங்குக்கு அருகில் நேற்றுமுன்தினம் இரவு அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வீசப்பட்டமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் ஆரம்ப கட்ட விசாரணைகளை மேற்கொள்வதற்காக குழுவொன்று சம்பவ இடத்துக்கு விஜயம் செய்தது என்று மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான முதற்கட்ட அறிக்கை நாளை ஆணைக்குழுவிடம் 2



## நாளை மீளவும் கூடும் அரசமைப்புப் பேரவை



சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பிற்பகல் 3 மணிக்குக் கூட்டம் நடைபெறவுள்ளது.

சபை முதல் முறையாக ஜனவரி 25ஆம் திகதி கூடி கடைசியாக ஜனவரி 30ஆம் திகதி கூடியது.

அரசமைப்பின் 41 பி பிரிவின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைக்குழு 2

# அடிமைத்தனத்திலிருந்து மக்களை விடுவிப்போம்!

## பிரசாரக் கூட்டத்தில் சஜித் சபதம்





ராஜபக்சவின் அடிமைத்தனத்தை இன்னமும் உறுதிப்படுத்தும் 'மொட்டு' – 'யானை' அரசை வீட்டுக்கு அனுப்புவதற்கான முதல் நடவடிக்கை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெற்றதன் பின்னர் ஆரம்பிக்கப்படும்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். பாணந்துறையில் நேற்று (04) நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் பிரசாரக் கூட்டத்தில் 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## போராட்டக்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையளிக்கப்படவுள்ளது. அறிக்கையின் அடிப்படையில் விசாரணைகள் தொடரும் என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

75 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்கு அதிக தொகை செலவிடப்பட்டதை எதிர்த்து சமூக ஆர்வலர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் குழு போராட்டம் நடத்தியதுடன் சத்தியாக்கிரகப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

## நாளை மீளவும்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களாக நியமனம் செய்வதற்கான விண்ணப்பங்களைக் கோரும் விளம்பரத்தை பெப்ரவரி 1ஆம் திகதி பத்திரிகைகளில் வெளியிடுவதற்கு அரசமைப்பு சபை கடந்த கூட்டத்தில் தீர்மானித்தது. விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு 2023 பெப்ரவரி 15 ஆம் திகதி என நிர்ணயிக்கப்பட்டது.

மொஹான் சமரநாயக்க மற்றும் உதேனி விக்கிரமசிங்க ஆகியோரின் இராஜிநாமாவை அடுத்து இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவில் உள்ள இரண்டு வெற்றிடங்களை சபை கவனத்தில்கொள்ள வாய்ப்புள்ளது.

## ராஜபக்சக்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைத்திரிபால சிறிசேன ஆகியோரது பெயர்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. எனினும், அவ்விருவரும் சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை.

அத்தோடு முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்ச, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோரது பெயர்கள் நிகழ்ச்சி நிரலிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

அதேவேளை, நேற்றைய நிகழ்வில் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்ட போதிலும் சமல் ராஜபக்ச எம்.பி., நாமல் ராஜபக்ச எம்.பி. மற்றும் இராஜங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ச ஆகியோர் பங்கேற்கவில்லை.

எனவே, இம்முறை சுதந்திர தின நிகழ்வு ராஜபக்சக்கள் எவரும் பங்கேற்காத நிகழ்வாகவே அமைந்துள்ளது.

மற்றொரு குழுவினர் போராட்டம் நடைபெறும் இடத்துக்குச் சென்றதை அடுத்து அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

இதையடுத்து, வெள்ளிக்கிழமை இரவு அந்தக் கும்பலைக் கலைக்கப் பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினர்.

அமைதியின்மையின் போது கைது செய்யப்பட்ட மூவர் நேற்று மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

## அடிமைத்தனத்தி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய அரசு தவறான கொள்கைகளைப் பின்பற்றி நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சிக்கின்றது. இவர்களின் இத்தகைய செயற்பாடுகளால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன.

ராஜபக்ச குடும்பம் இந்நாட்டை அழித்து வறிய நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. சிறு குழந்தை முதல் முதியவர் வரை, அரச ஊழியர் முதல் கூலித்தொழிலாளி வரை அனைவரினதும் இயல்பு வாழ்க்கை வீழ்ந்துள்ளது.

இந்நாட்டின் 220 இலட்சம் மக்கள் இனி எந்த ஆட்சியாளருக்கும், தலைவருக்கும், அரசியல்வாதிகளுக்கும் அடிமைகள் அல்ல.

உலகில் எந்த நாடும் பொருளாதாரத்தைச் சுருக்கி பிரச்சினைகளைத் தீர்த்ததாக இல்லை. தற்போதைய அரசு பொருளாதாரத்தைச் சுருக்கி நாட்டு மக்களை அழிக்க முயல்கின்றது. தேவையைக் குறைப்பதன் மூலம் நாட்டின் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்று நினைக்கின்றார்கள். அது தவறு. இந்தப் பொருளாதார மற்றும் சமூக வீழ்ச்சியிலிருந்து மீள்வதற்குப் பொருளாதாரத்தை விரிவுபடுத்துவதே ஒரே தீர்வு. 2019 இல் ஒரு தவறு செய்யப்பட்டது. 2023 இல் மக்கள் மற்றொருவருக்குப் பின்னால் ஓடுகின்றனர். இந்நாட்களில் பொய் சொல்லி தம்பட்டம் அடிக்கும் ஆட்சியாளர்களுக்குச் சர்வதேச ஆதரவு கிடைக்காது.

எமது நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமானால் அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் வர்த்தகம் செய்யும் திறன் வேண்டும்.

வடகொரியா, கியூபா போன்ற சோசலிச நாடுகள் எமது நாட்டைக் கட்டியெழுப்ப உதவாது என்பதால் இதுபோன்ற சோசலிவாதிகளின் பின்னால் செல்ல வேண்டாம்.

இவ்வாறான சோசலிசவாதிகளின் பின்னால் சென்றால் நாடு தற்போதைய நிலையில் இருந்து மேலும் வீழ்ச்சியடையும் – என்றார்

## ஒரே குடும்பத்தை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

சிலாபம் முகத்துவாரத்திற்கு படகில் சென்ற இவர்கள் படகில் இருந்து இறங்கி அங்கு நீராடச் சென்றுள்ள நிலையில் நீரில் மூழ்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## கோடீஸ்வர......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(வயது 45) சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பொன்றிலிருந்து இன்று அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தொழிலதிபர் மற்றும் அவரது குடும்பத்தினர் ஜகார்த்தாவுக்குச் சுற்றுலா சென்றிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்துக்கான காரணம் தெரியவராத நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஜகார்த்தா பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.







# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தேவையின்போது மட்டும் நல்லவர்களாகாதீர்கள்!

தேர்தல் நெருங்கிவரும் நிலையிலும் பொருளாதார நெருக்கீடுகள் அதிகம் அழுத்தம் கொடுக்கும் நிலையிலும் ஆங்காங்கே சில நல்ல விடயங்களும் நடப்பதைக் காண முடிகின்றது.

3அரசியல்கைதிகள்விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள். 108ஏக்கர்நிலம்சம்பிரதாயபூர்வமாகவிடுவிக்கப்பட்டிருக்கின்றது. இன்று பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ள ஒரு கோயிலுக்குச் சென்று பூசை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. சுதந்திர தினத்தின்போது மாணவர்கள் நடத்துகின்ற பேரணிகளுக்கு வன்முறைசார்ந்த பெரும் எதிர்வினைகள் காட்டப்படவில்லை.

இப்படி பல ஆறுதலான விடயங்கள் ஆங்காங்கே நடக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஏதோ ஒரு விதத்தில் அழுத்தங்களுக்குப் பின்னரோ, அல்லது சலுகைகளாகவோதான் நடக்கின்றன என்பதுதான் கவலைக்குரியன.

அரசியல் கைதிகள் விடுதலை மிக நீண்ட காலமாக இருந்து வரும் பிரச்சினை. தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளை அரச தலைவரின் மன்னிப்பின் கீழ் விடுவிப்பது என்பதும் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம். போர் முடிந்து 14 ஆண்டுகள் கழிந்த நிலையில் கைதிகள் விடுவிக்கப்படுவதற்கு எதிர்க் கட்சிகளும்கூட ஆதரவு தெரிவித்திருக்கின்றன. அப்படியிருந்தும் கைதிகளை விடுவிப்பதற்கு இழுத்தடிக்கப்படுகின்றது. அல்லது அடையாளமாக ஒரு சிலர் மட்டும் விடுவிக்கப்படுகின்றனர். ஒரு சரியான, ஒழுங்குமுறையான, பொறிமுறை ரீதியானதாக இது நடக்காமல் இருப்பது புரிந்துகொள்வதற்குச் சிரமமானதாகவும் சந்தேகங்களைக் கிளப்புவதாகவுமே அமைகின்றன.

அதேபோன்றே காணி விடுவிப்பும். இப்போது விடுவிக்கப்பட்டிருக்கக்கூடிய 108 ஏக்கர் காணியில் சில வருடங்களுக்கு முன்பே விடுவிக்கக்கூடியவை என்று அடையாளப்படுத்தி உத்தரவாதப்படுத்தப்பட்ட காணிகளும் அடக்கம். அந்தக் காணிகள் ஏன் இதுவரையில் விடுவிக்கப்படவில்லை? நெருக்குதல் அல்லது அழுத்தம் கொடுக்கப்படும் வரைக்கும் ஏன் அது நடக்கவில்லை? அதுபோன்றதே இன்னும் பல காணிகளின் நிலைகளும். படையினரின் உடனடிப் பயன்பாட்டில்இல்லாதபோதும்அவற்றைக்கையளிப்பதை எது தடுக்கின்றது?

இதோ இப்போது பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி வழிபாடுகள் மறுக்கப்பட்டிருந்த கோயில் இப்போது வழிபாட்டுக்காகத் திறந்துவிடப்பட்டுள்ளது. இந்தக் கோயில்வழிபாடுநடத்தமுதலில்அனுமதிவழங்கப்பட்டது. ஆனால் பின்னர் அது பாதுகாப்பு காரணங்கள் என்று கூறித் தடுக்கப்பட்டது. இப்போது மீண்டும் அனுமதிக்கப்படுகின்றது என்றால் இப்போது பாதுகாப்பு காரணங்கள் இல்லையா? இதுபோன்ற சின்னச் சின்ன விடயங்களிலும் காட்டப்படும் அதிகாரத்தனம், அசிரத்தை, புறக்கணிப்பு என்பன ஒட்டுமொத்தமாக இனஅரசியலுடன்மிகநெருக்கிப்பார்க்கப்படக்கூடியவை என்கிற உணர்திறனுடன் செயற்படுவது அரச மற்றும் அதிகாரத் தரப்பினருக்கு முக்கியம்.

எனவே தேர்தலும் தேவையும் வருகிறபோது மட்டும் நல்லவர்களாக மாறுவதை விடுத்து உண்மையான நுண்ணுணர்வோடு நடந்துகொள்வதே அனைவருக்கும் நன்மைபயக்கக்கூடியது.

# மானம்பிராய் பிள்ளையார் ஆலயத்தில் வழிபாடுகள் நடத்த மக்களுக்கு அனுமதி

## அமைச்சர் டக்ளஸ் ஏற்பாட்டில் நடந்தது

உயர் பாதுகாப்பு வலயத்தை காரணம் காட்டி பூசை வழிபாடுகளுக்கு தடுக்கப்பட்டுவந்த வாசாவிளான் மேற்கு மானம்பிராய் பிள்ளையார் கோயிலில் பூசை வழிபாடுகளை மேற்கொள்ள பொதுமக்களுக்கு இன்று முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா படை அதிகாரிகளுடன் பேசியதை அடுத்து இந்த அனுமதி வழங்கப்பட்டதாக அவரது அலுவலகச் செய்திக்குறிப்புத்தெரிவித்தது.

அனுமதி கிடைத்ததை அடுத்து தைப்பூசமான இன்று அங்கு பொங்கல் பொங்கி வழிபாடுகள் நடத்தப்பட்டன என்றும் அந்தக் குறிப்புத் தெரிவித்தது. அது மேலும் தெரிவித்ததாவது:

உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள மானம்பிராய்பிள்ளையார் ஆலயத்திற்கு பக்தர்கள் சென்றுவர தொடக்க காலங்களில் அனுமதி கொடுக்கப்பட்டு வந்த போதிலும் பின்னர் பாதுகாப்பு விடயங்களை காரணம் காட்டி மறுக்கப்பட்டது.

இந்நிலையில் ஆலய நிர்வாகத்தினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்த தமது பூர்வீக ஆலயத்தில் பூசை வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதி பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்கிணங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாதுகாப்பு உயரதிகாரிகளுடன் குறித்த விடயம் தொடர்பில் கலந்துரையாடி பொதுமக்கள் பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு அனுமதி பெற்றுக் கொடுக்கப்பட்டது.

இதனடிப்படையில் இந்துக்களின் சிறப்புநாளான தைப்பூச தினமான இன்று ஆலயத்திற்குச் சென்ற பக்தர்கள் தைப்பூச வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் பொங்கலும் பொங்கிப் படைத்தனர்.

இந்தபூசைவழிபாடுகளில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரதிநிதிகளாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்டநிர்வாகப்பொறுப்பாளர்சிவகுருபாலகிருஸ்ணன் மற்றும் உதவி நிர்வாகப் பொறுப்பாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி. வடக்கு பிரதேச நிர்வாக பொறுப்பாளரும் பிரதேச சபை உறுப்பினருமான அன்பு – ஜெயபாலசிங்கம் மற்றும் குறித்த பிரதேச சபையின் உறுப்பினர்கள் பொதுமக்கள் என 50 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு பூசை வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இந்தப் பூசை வழிபாடுகளுக்குப் பாதுகாப்பு தரப்பினர் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கினர் – என்றுள்ளது.

# உரும்பிராய் பாடசாலையில் திறன் வகுப்பறை திறப்பு



உரும்பிராய் றோமன் கத்தோலிக் கத்தமிழ்க் கலவன் பாடசாலையில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறை யில் கற்றல், கற்பித்தல் செயற்பாடு கள் ஜனவரி 25ஆம் திகதி காலை 10.00 மணிக்கு தொடக்கி வைக் கப்பட்டது.

பாடசாலை அதிபர் ஜே.மகிந்தன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் விருந்தினர்களாக உரும் பிராய் இந்துக்கல்லூரி பழைய மாணவனும் பொறியியலாளருமான செல்வன் செல்வதுரை, உரும்பிராய் மேம்பாட்டு ஒன்றியத்தின் தலைவர் மருத்துவர் வே.கணேசவேல், யாழ். கல்வி வலய உதவி கல்விப்பணிப்பா ளர் ச.சிவகுமார், காந்திஜி சனசமூக நிலைய தலைவர் தே.றமணதாசன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மாணவ மாணவிகள் திறன் பலகையில் தமது பாடங்களில் செயற்பட்ட விதம் நிகழ்வில் பங்கேற்ற வர்களை ஈர்த்தது. ஏற்கெனவே இரட்ணம் பவுண்டேன் மற்றும் IMHO‡USA ஏற்பாட்டில் பயிற்சி வழங்கப்பட ஆசிரியரின் வழிகாட் டலில் ஆசிரியர் ஒருவரும் திறன் பலகையைதம்கற்றல்கற்பித்தல்செயற்பாட்டில் எவ்வாறு பயன்படுத் தலாம் என்பதை இந்நிகழ்வில் செய்து காட்டினார்.

உரும்பிராய் பாடசாலைகளின் பழைய மாணவர்சங்கம்–கனடா, ஐக்கிய இராட்சியத்தை தளமாகக் கொண்டு இயங்கும் ரட்ணம் பவுண்டேசன், n¨D¨ß{‡¥¨ü° ஆகிய நிறுவனங்களின் நிதிப்பங் களிப்பில் இந்த திறன் வகுப்பறை அமைக்கப்பட்டது.

உதவியளித்திருந்த அமைப் புக்களுக்கு அதிபர் நன்றி தெரி வித்தார்.

# சு.க. வேட்பாளர் அறிமுகம் கிளிநொச்சியில் சனியன்று

தென்மராட்சி, பெப். 5

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் கிளிநொச்சி மாவட்டவேட்பாளர்அறிமுகநிகழ்வுசனிக்கிழமை காலை நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் கிளிநொச்சியில் உள்ள அவரது அலுவலகத்தில் இடம்பெற்றது.

கரைச்சி மற்றும் பச்சிலைப் பள்ளி பிரதேசசபைகளுக்கானதேர்தலில்போட்டியிடும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# அயோத்தி ராமர் கோவில் நிலத்தை விகாரை நிலமாக அறிவிக்க மறுப்பு

(ந. லோகதயாளன்)
யாழ்ப்பாணம், பெப்.05

இந்தியாவின் அயோத்தியா நகரில் இராமர் கோயில் கட்டப்பட்டு நிலத்தை பௌத்த புனித பூமியாக அறிவித்து அந்த இடத்தை' அயோத்தியா பௌத்த விகாரை' என்று பெயரிடவேண்டும் என்று கோரிய மனுவை அந்நாட்டின் உச்சநீதிமன்றம் வெள்ளிக்கிழமை நிராகரித்தது.

கோயில் கட்டப்படும் இடத்தில் பௌத்த மரபுச் சின்னங்கள் இருந்தன என்று கூறிய மனுதாரரின் கூற்றைஏற்கதலைமைநீதியரசர்கள் கலாநிதி சந்திரசூட் மற்றும் பி.எஸ்.நரசிம்மா அடங்கிய அமர்வு மறுத்துவிட்டது.

இந்த விடயம் ஏற்கெனவே அயோத்தியா நிலப்பரப்பு தொடர்பான தீர்ப்பில் பரிசீலிக்கப்பட்டுவிட்டது. எனவே நீங்கள் மனுவை மீளப் பெறுங்கள் அல்லது நாங்கள் தள்ளுபடி செய்கிறோம் என்றுநீதிபதிகள்கூறியதைஅடுத்து மனு தாரர் வினீத் மௌரியா மனுவை மீளப் பெற்றுக்கொண்டார்.

தற்போது ராமர் கோவில் கட்டப்படும் இடத்தில் 16ஆம் நூற்றாண்டில் பாபர் மசூதி கட்டப்படுவதற்கு முன்னரே அங்கு பௌத்த சின்னங்களுடன்கட்டுமானங்களும் இருந்தன என்று முன்னதாக மனுதாரர் தனது மனுவில் தெரிவித்திருந்தார்.

இந்திய நீதிமன்ற வரலாற்றில் மிகவும் முக்கியமானதொரு தீர்ப்பாகக் கருதப்படும் 'அயோத்தியா ராமர் கோவில் நிலப்பிரச்சனை' தீர்ப்பை அளிந்த ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன குழாமில் தற் போதைய தலைமை நீதிபதி சந்திரசூடும் ஒருவராக இருந்தார்.

## விக்கிபீடியாவுக்கு பாகிஸ்தானில் தடை

மத நிந்தனைக் கருத்துகளை நீக்கவில்லை என்று கூறி, இணையவழி தகவல் களஞ்சியமான விக்கிபீடியாவைபாகிஸ்தான்முடக்கியுள்ளது.

இது குறித்து பாகிஸ்தான் தொலைத்தொடாபு ஆணையத்தின் (பிடிஏ) செய்தித் தொடாபாளா மலாஹத் ஒபைத் சனிக்கிழமை தெரிவித்ததாவது:

விக்கிபீடியாவில் மத நிந்தனை கருத்துகள் இடம்பெற்றிருப்பது, தொலைத்தொடாபு ஆணையத்தால் கண்டறியப்பட்டு, அவற்றை நீக்கவோ அல்லதுதடைசெய்யவோ வலியுறுத்தி விக்கிபீடியாவுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. விசார ணைக்கான வாய்ப்பும் அளிக் கப்பட்டது.

விக்கிபீடியா தரப்பில் இருந்து யாரும்ஆணையம்முன்விளக்கமளிக்கவில்லை. அத்துடன், ஆணை யத்தின் உத்தரவுப்படி மத நிந்தனை கருத்துகளும் நீக்கப்படவுமில்லை. இதையடுத்து, விக்கிபீடியாவை கறுப்புப்பட்டியலில்சோத்து, அதனை முடக்கியுள்ளோம்.சம்பந்தப்பட்டகருத்துகள் நீக்கப்பட்ட பிறகே, இந்த நடவடிக்கை மறுஆய்வு செய்யப் படும் –என்றார்.

இணையவழி இலவச தகவல் களஞ்சியமான விக்கிபீடியாவில், உலகம் முழுவதும் இருந்து தன்னார்வலாகளால் கருத்துகள் உருவாக்கப்பட்டு, திருத்தப்படுகின்றன. இந்த தரவு தளம், விக்கிமீடியா அறக்கட்டளையால்நடத்தப்பட்டுவருகிறது.

“விக்கிபீடியாவில் என்ன உள்ளடக்கம் இடம்பெறவேண்டும், எவை பராமரிக்கப்படவேண்டும் என்பது குறித்து நாங்கள் முடிவெடுப்பதில்லை; பலா ஒருங்கிணைந்து, உள்ளடக்கத்தைத் தீர்மானிப்பதன் விளைவாக நடுநிலையான, சிறப்பான கட்டுரைகள் உருவாகின்றன. மக்கள்தொகை அடிப்படையில் 5ஆவது பெரிய நாடான பாகிஸ்தானில், மாபெரும் இலவச அறிவுக் களஞ்சியத்துக்கான அணுகல் மறுக்கப்பட்டுள்ளது. இது தொடாந்தால், பாகிஸ்தானின் வரலாறு, கலாசாரத்தை யாரும் அணுகுவதும் தடைபடும்” – என்று விக்கிபீடியா நிர்வாகம் தெரிவித்தது.



# பாக். முன்னாள் அதிபர் முஷாரப் காலமானார்

பாகிஸ்தான் முன்னாள் அதிபர் பர்வேஸ் முாரப் உடல்நலக் குறைவால் உயிரிழந்தார். அவருக்கு வயது 79.

பர்வேஸ் முஷாரப் நீண்ட நாட்களாக அமிலாய்டோசிஸ் நோயினால் அவதிப்பட்டு வந்தார். சிகிச்சைபயனின்றிஅவர் இறந்தார் என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்தன.

முஷாரப் இறப்பு குறித்து தெஹ்ரிக் இ இன்சாஃப் கட்சித் தலைவர் ஃபகத் உசைன், ”பர்வேஸ் முஷாரப் காலமானார், அவர் ஒரு சிறந்த மனிதர்,

அவரது சிந்தனையில் பாகிஸ்தானே முதலில் இருந்தது. கடவுள் அவர் மீது கருணை காட்டட்டும் என்றார். முன்னதாக கடந்த ஆண்டு ஜுன் மாதமே முாரப்பின் உடல்நிலை மோசமடைந்து இருந்ததாக அவரது குடும்பத்தினர் தெரிவித்திருந்தனர்.

ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட ஆட்சியைக் கவிழ்த்து பதவிக்கு வந்த இராணுவத் தளபதி பர்வேஸ் முஷாரப். பின்னர் தேர்தல் வைத்து அதன் மூலம் தன்னை பாகிஸ்தானின் அதிபராக நிலைநிறுத்திக்கொண்டார். அவர் பதவியில் இருந்த காலத்தில், அப்போதைய பிரதமர் நவாஸ் ஷெரீப்அரசுக்குஎதிராக, 2007ஆம் ஆண்டு நவம்பர் 3ஆம் தேதி அவசர நிலையை பிரகடனம் செய்தார். மேலும், உச்ச நீதிமன்ற நீதிபதிகளையும் அவர் சிறையில் அடைத்தார்.

இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதை எதிர்த்து அவர் மீது 2013ஆம் ஆண்டு டிசெம்பரில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு நடந்து கொண்டிருக்கும்போது 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக எனக் கூறி, பாகிஸ்தானிலிருந்து முஷாரப் வெளியேறி துபாய் சென்றுவிட்டார்.

பின்னர் அங்கேயே அவர் தங்கிவிட்டார். முன்னதாக தேசத் துரோக வழக்கில் குற்ற வாளியாக அறிவிக்கப்பட்ட முாரப்புக்கு சிறப்பு நீதிமன்றம் தூக்கு தண்டனையை அறிவித்தது. அதனை எதிர்த்து தொடுக்கப்பட்ட சீராய்வு மனுவை விசாரித்த லாகூர் உயர் நீதிமன்றம், பர்வேஸ்முஷாரப்புக்குவிதிக்கப்பட்ட தூக்குதண்டனையைநீக்கிவிட்டது.

# வியாழனுக்கு மேலும் 12 புதிய நிலாக்கள்

வியாழன் (ஜுபிடர்) கிரகத்தின் 12 புதிய நிலாக்கள் அமெரிக்க வானியல் அறிஞாகளால் அண்மையில் கண்டுப்பிடிக்கப்பட்டன.

இதன் மூலம், சூரிய குடும்பத்திலேயே அதிகபட்சமாக 92 நிலாக்களுடன் வியாழன் கிரகம் முதலிடத்தைப் பிடித்தது. 83 நிலாக்களுடன் முதலிடத்தில் இருந்த சனி கிரகம் 2ஆம் இடத்துக்குத் தள்ளப்பட்டது.

அமெரிக்காவின் வோஷிங்டன் நகரில் அமைந்துள்ள கார்னெகி அறிவியல்நிறுவனத்தின்வானியல் அறிஞாகளால்நடத்தப்பட்டஆய்வில் புதிய 12 நிலாக்களும் கண்டுபிடிக்கப்பட்டன. சாவதேச வானியல் ஒன்றியத்தின் சிறு கிரக மையம் நிர்வகிக்கும் சிறு கிரகங்களின் பட்டியலில் இந்தப் புதிய 12 நிலாக்களும் இணைக்கப்பட்டன.

இது தொடாபாக ஆய்வுக் குழுவில் இடம்பெற்ற அமெரிக்காவின் பிரபல வானியல் அறிஞா ஸ்காட் ப்பாட் தெரிவித்ததாவது:

2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் ஹவாய் மாகாணம் மற்றும் சிலி நாட்டில் அமையப்பெற்ற தொலைநோக்கிகள் மூலமாக நடத்தப்பட்ட ஆய்வில் புதிய நிலாக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

அனைத்து நிலாக்களும் 1 கி.மீ. முதல் 3 கி.மீ. வரை அளவு கொண்ட சிறிய அளவிலான கிரகங்கள். சனி மற்றும் வியாழன் கிரகங்களைச் சூழந்து இருக்கும் சிறிய நிலாக்கள் ஒன்றோடு ஒன்று மோதியோ அல்லது வான்கோள்களுடன் மோதியோ புதிய நிலாக்கள் உருவாகி இருக்கக்கூடும். இருப்பினும், இந்த நிலாக்களின் தோற்றம் குறித்து வரும் காலங்களில் விரிவான ஆய்வு நடத்தப்படும். புதிய நிலாக்களுக்கு இன்னும் பெயாகள் சூட்டவில்லை – என்றாா ஸ்காட்.

சனி மற்றும் வியாழன் கிரகங்களின் 70க்கும் மேற்பட்ட நிலாக்களைக் கண்டறியும் ஆய்வுகளில் ஸ்காட் பணியாற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

# உணவுக்கு உத்தரவாதம் இல்லாமல் ஆப்கனில் பெண்கள் பலர் பாதிவிப்பு

தேசிய, சர்வதேச அமைப்புகளில் பெண்கள் பணிபுரிய விதிக்கப்பட்ட தடை காரணமாக ஆப்கனைச் சேர்ந்த திருமணமாகாத பெண்கள், கணவரை இழந்த பெண்கள் உணவுக்கு உத்தரவாதமின்றி தவித்து வருகின்றனர் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

ஆப்கனிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியை கைப்பற்றியதை அடுத்து அங்கு பெண்களுக்கு எதிராக பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. நடுநிலை கல்வி மற்றும் உயர் கல்வி கற்க ஆப்கன் பெண்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆண் துணை இன்றி பெண்கள் வெளியே செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. தேசிய, சர்வதேச அமைப்புகளில் பெண்கள் பணிபுரியவும் தடை விதிக் குகப்பட்டுள்ளது. இதனால், வேலைக்குச் செல்லும் ஆண்கள் உள்ள குடும்பங்களில் மட்டுமே அனைவருக்கும் உணவு கிடைத்து வருகிறது.

வயதான ஆண்கள், வேலைக்குச் செல்ல முடியாத நிலையில் உள்ள ஆண்கள் உள்ள குடும்பங்களிலும், ஆண்களே இல்லாத குடும்பங்களிலும் பெண்களின் வருமானத்தைக் கொண்டே இதுவரை அவர்கள் வாழ்ந்து வந்தனர். அதற்கான வாய்ப்பு தற்போது மறுக்கப்பட்டுள்ளதால், திருமணமாகாத பெண்கள், விதவைகள் உள்பட அதிக அளவிலான பெண்கள் உணவுக்கு உத்தரவாதமற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

முந்தைய ஆப்கன் அரசில் பாதுகாப்புத் துறையில் பணியாற்றி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தியாகிகளுக்கான உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது. அவர்கள் தலிபான்களுக்கு எதிராக போரிட்டவர்கள் என்பதால், அந்த உதவித் தொகையை தலிபான் அரசு நிறுத்திவிட்டது. இதன் காரணமாக, அரசின் உதவித் தொகையை பெற்று வந்த குடும்பங்கள் தற்போது மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி உள்ளன.

இதேபோல், நகராட்சி, மாநகராட்சி பணிகளில் முன்பு இருந்த ஆண்கள் நீக்கப்பட்டு, அங்கு தலிபான்கள் பணியமர்த்தப்பட்டுள்ளதாகவும் இதனால், ஆண்கள் குறிப்பாக மாற்றுத்திறனாளிகள் மாற்றுவேலை கிடைக்காமல் பிச்சை எடுத்து குடும்பத்தை காப்பாற்றி வருவதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

ஆப்கனில் 2018இல் 72 சதவீதம் மக்கள் ஏழ்மை நிலையில் இருந்தனர். அது தற்போது 97 சதவீதமாக உயர்ந்துள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. 2015இல் பெண்கள் தலையிலான குடும்பங்கள் 1.7 சதவீதமாக இருந்த நிலையில், அது தற்போது 4 சதவீதமாக உள்ளதாகவும் ஐநா உலக உணவு திட்டத்தின் புள்ளி விவரம் கூறுகிறது.

பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் உணவுக்கு உத்தரவாதமின்றி இன்னும் எவ்வளவு காலத்திற்கு தாக்குப்பிடிக்க முடியும் என்பது மனித குலத்தை உலுக்கும் மிகப் பெரிய கேள்விக்குரியாக மாறி இருப்பதாக சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# ஸ்டார் ஷிப் மார்ச்சில் விண்ணில் பாயலாம்

## எலான் மஸ்க் தெரிவிப்பு

செவ்வாய் மற்றும் சந்திரனுக்கு வீரர்களை அனுப்பும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ஸ்டார் ஷிப் ரொக்கெட்டை மார்ச் மாதத்தில் விண்ணில் செலுத்த திட்டமிட்டுள்ளதாக நிறுவனத் தலைவர் எலான் மஸ்க் தனது கீச்சகப் பக்கத்தில் தெரிவித்துள்ளார். எலான் மஸ்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம், கடந்த ஆண்டு முதல் ஸ்டார்ஷிப் என்ற ரொக்கெட் அமைப்பை உருவாக்கி சோதித்து வருகிறது. இந்த ஸ்டார்ஷிப் ராக்கெட் பூமியில் இருந்து விண்வெளியில் உள்ள பிற கிரகத்திற்கு மனிதர்களை அழைத்துச் செல்லும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள மிகப் பெரிய விண்கலம்.

100 தொண் சரக்குகளை பூமியின் சுற்றுப்பாதைக்கு ஏற்றிச் செல்லும் திறன் கொண்டது. இந்த ஸ்டார்ஷிப் மிகவும் சக்திவாய்ந்த ஏவுகணையாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வகை ரொக்கெட்டை நாசா, அடுத்த ஆண்டு சந்திரனுக்கு விண்வெளி வீரர்களை அழைத்துச் செல்வதற்காகத் தேர்ந்தெடுத்துள்ளது. இதனிடையே, ஸ்டார்ஷிப்பை பிப்ர வரி மாதம் பிற்பகுதியில் அறிமுகப்படுத்த முடியும் என்றும் மார்ச் மாதம் விண்ணில் செலுத்துவதற்கான முயற்சிகள் நடைபெற்று வரு வதாகவும் எலான் மஸ்க் ஜனவரி மாதம் தெரிவித்திருந்தார். இந்நிலையில், அடுத்த மாதம் ஸ்டார்ஷிப் ராக்கெட் சிஸ்டத்தை அறிமுகப்படுத்தலாம் என எலான் மஸ்க் இப்போது தெரிவித்துள்ளார். மீதமுள்ள சோதனைகள் சரியாக நடந்தால், அடுத்த மாதம் ஸ்டார்ஷிப் தொடங்க முயற்சிப்போம், என்று பயனர் ஒருவரின் ஸ்டார்ஷிப் பற்றிய கீச்சிடலுக்கு எலான் மஸ்க் பதிலளித்துள்ளார்.

# பெற்றோலின் திடீர் விலை அதிகரிப்பு விலை சூத்திரத்தின் பிரகாரம் அல்ல!

## சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு



இலங்கையில் பெற்றோல் விலையில் ஏற்பட்ட திடீர் அதிகரிப்பு எந்தவொரு விலைச்சூத்திரத்தின் பிரகாரமும் மேற்கொள்ளப்படவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

தங்களின் விருப்பத்துக்கமைய இந்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

துறைமுகத்தில் இருந்து இறக்கப்படும் ஒரு லீற்றர் பெற்றோல் விலை 200 ரூபாவாகும் எனவும் உலக சந்தையில் எண்ணெய் விலை குறைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெற்றோலுக்கு பாரிய வரி விதிக்கப்பட்டுள்ளமையால் 200 ரூபா பெற்றோல் லீற்றருக்கு மேலும் 200 ரூபா அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## காரைதீவின் முன்னாள் உபதவிசாளர் கிருஷ்ணமூர்த்தி காலமானார்!

(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளரும் சமூக சேவையாளருமான ரோட்டேரியன் எந்திரி வீரகத்தி கிருஷ்ணமூர்த்தி ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார்.

காரைதீவு பிரதேச சபையின் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முதலாவது உப தவிசாளரான கிருஷ்ணமூர்த்தி பல சமூகநலப் பணிகளை ஆற்றியுள்ளார்.

இம்முறை நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மன்ற காரைதீவு பிரதேச சபைக்கான தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி சார்பில் வேட்பாளராக களமிறங்கியிருந்தார்.

யாழ்ப்பாணம் கரவெட்டியை பிறப்பிடமாகக் கொண்ட கிருஷ்ணமூர்த்தி காரைதீவில் திருமணம் செய்து வாழ்ந்து வந்தவராவார். இறக்கும்போது அவருக்கு வயது 66 .

அவரது இறுதிச் சடங்கு திங்கள்கிழமை காலை 10 மணி அளவில் வீட்டில் இடம்பெற்று காரைதீவு இந்துமயானத்தில் நல்லடக்கம் நடைபெறும் என்று குடும்பத்தினர் தெரிவித்தனர்.

## பாலம்பட்டாறு கிராம அலுவலர் குழுவிற்கு முதலிடம்

(ஹஸ்பர்)

திருகோணமலை மட்டத்தில் நடத்தப்பட்ட சிறந்த கிராமிய பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் உணவுப் பாதுகாப்புக் குழு தெரிவில் முதலாம் இடத்தை தம்பலகாமம் பாலம்பட்டாறு கிராம உத்தியோகத்தர் குழு பெற்றது.

இதற்கான கேடயமும் சான்றிதழும் திருகோணமலை மாவட்ட செயலக வளாகத்தில் சனிக்கிழமை காலை இடம்பெற்ற 75 ஆவது சுதந்திர தின வைபவத்தில் வைத்து வழங்கப்பட்டது. இதற்கான பரிசில்களை தம்பலகாமம் பிரதேச செயலக பாலம் போட்டாறு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் வை.தங்கரூபன் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரளவிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.

விருதுவழங்கும் நிகழ்வில் மாவட்டச் செயலர் பி.எச். என்.ஜயவிக்ரம, மாகாண பிரதம செயலாளர், திணைக்கள தலைவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# வரியைக் குறைக்க அரசு தீர்மானமாம்!

## பந்துல கூறுகிறார்

அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களின் மாதாந்த வருமானத்தைக் கணக்கிடும் போது அவர்களின் மாத வருமானத்தை நிதிப் பலனாகக் கருதி அறவிடப்படும் வரியைக் குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஊழியர்களின் சொந்த வீடுகள், வாகனங்கள், எரிபொருள் அல்லது போக்குவரத்து கொடுப்பனவுகள் போன்றவற்றைக் கருத்திற்கொண்டு மாதாந்த நிதி பலனாகக் கருதி விதிக்கப்படும் வரியைக் குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் சிரேஷ்ட அமைச்சர்கள் இது தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவித்திருந்தனர்.

தொழில் வல்லுநர்களுக்கு வரி விதிக்கும் போது குறைந்த ஊதியத்தில் இருந்து அறவிடப்படும் வரி சதவீதத்தை குறைக்க அமைச்சரவைக்கு உரிய பரிந்துரைகளை வழங்குமாறு நிதியமைச்சு அதிகாரிகளுக்கு, ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார் என அரசாங்கப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

சில அரச ஊழியர்கள் மற்றும் தனியார் துறை ஊழியர்கள் மாதாந்த வருமானத்தைப் பொருட்படுத்தாமல் அவர்களின் சம்பளத்துக்கு இணையான கொடுப்பனவுகளைப் பெறுவதால் மாதாந்த வருமானம் என அனைத்தையும் பொருட்படுத்தாமல் நிவாரணம் வழங்குவதே இந்த வரி திருத்தத்தின் நோக்கமாகும் என அமைச்சர் குணவர்தன மேலும் தெரிவித்துள்ளார்.

# காஸ் சிலின்டர் திருடும் குழு நிந்தவூரில் மாட்டியது

(பாறுக் ஷிஹான்)

எரிவாயு சிலிண்டர்கள் உள்ளிட்ட நீர் பம்பிகள் முதலானவற்றை திருடி விற்பனை செய்து வந்த குழுவினரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பல பகுதிகளிலும் வீட்டுக்கு கூரையை பிரித்துக் கொண்டு உள்ளே இறங்கி எரிவாயு சிலிண்டர்கள் உள்ளிட்ட பொருட்களை களவாடி விற்பனை செய்து வந்த குழுவினரை வெள்ளிக்கிழமை மாலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.எம்.நஜீம் தலைமையிலான சிறு குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரியும் உப பொலிஸ் பரிசோதகருமான குணரட்ன, விசேட புலனாய்வு பிரிவு உத்தியோகத்தர் றிகான் குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கையினால் களவாடப்பட்ட 17 எரிவாயு சிலிண்டர்கள், 05 நீர் இறைக்கும் இயந்திரங்கள், 01 துவிச்சக்கர வண்டி, 01 றோல் கோஸ், பைப் 01 சுவர் வெட்டும் இயந்திரம் என்பன மீட்கப்பட்டுள்ளன.

கைதான 21 மற்றும் 23 வயதுடைய சந்தேகநபர்கள் உட்பட திருடப்பட்ட பொருட்களை கொள்வனவு செய்ததாக கூறப்படும் 26 வயதுடைய சந்தேகநபரையும் கைது செய்துள்ளனர்.







# புலனெலாம் நன்னெறி புகுந்திடும் நன்னாள்!

தந்தைக்கு உபதேசம் செய்த குருநாதன்
தாயின்றி உருவான ஞான குருநாதன்
வந்திக்கும் அடியார்க்கும் வரமருளும் நாதன்
வள்ளிதெய்வ யானையுடன் காட்சிதரும் நாதன்

ஆறுபடை வீடமர்ந்த ஆறுமுக நாதன்
அருணகிரி தமிழ்பாட அருள்புரிந்த நாதன்
வீறுடைய அசுரர்தமை வெற்றி கொண்டநாதன்
வியந்துமே போற்றுகின்ற வெற்றிவேல் நாதன்

தந்தைக்கு குருவான தயையுடைய நாதன்
தைப்பூசத் திருநாளில் அவதாரம் செய்தார்
சிந்தைக்குள் புகுந்திருக்கும் அகந்தையினை அகற்ற
கந்தனாய் தைப்பூசம் வந்துதித்தார் காக்க

சிதறிய பொறிகள் மலர்களில் வீழ்ந்தன
அழகுடை குழந்தைகள் அறுவர் தோன்றினர்
கார்த்திகைப் பெண்கள் கைகளில் எடுத்தனர்
கனலது கந்தனாய் உருவினைப் பெற்றது

ஆணவ அரக்கரை அழித்திட வேலினை
அன்னை உமையவள் கொடுத்தனள் கையினில்
வேலவன் வாகையைச் சூடிய நாளதாய்
பூசத் திருநாள் பொலிந்தது புவியினில்

கந்தன் கோவில்கள் ஒளியினில் மிதந்திடும்
காவடி பலபல சன்னதி நிறைந்திடும்
கற்பூர சட்டிகள் தலைகளில் அமர்ந்திடும்
தைப்பூசத் திருநாள் சந்தோம் தந்திடும்

ஒளியினில் இறைவனைக் கண்டிடும் திருநாள்
உணர்வுகள் இறையுடன் கலந்திடும் திருநாள்
பலபல இடங்களில் மிளிர்ந்திடும் திருநாள்
பாங்குடை தைப்பூச திருநாள் ஆகும்

மங்கல நிகழ்வுகள் தொடங்கிடும் திருநாள்
மனைகளில் மகிழ்வுகள் நிறைந்திடும் திருநாள்
பொங்கலைத் தொடர்ந்து அமைந்திடும் திருநாள்
எங்களின் வாழ்வினில் தைப்பூசத் திருநாள்

உழவர்கள் புதிரை எடுத்திடும் திருநாள்
உணர்வுடன் அதனைப் பகிர்ந்துண்ணும் திருநாள்
கற்றிட ஏட்டினைத் தொடங்கிடும் திருநாள்
காதுகள் குத்தியே மகிழ்ந்திடும் நன்னாள்

புதியன பலபல தொடங்கிடும் பொன்னாள்
புலனெலாம் நன்னெறி புகுந்திடும் நன்னாள்
இறையது ஒளியாய் எழுந்திடும் திருநாள்
இகமதில் தைப்பூச திருநாள் ஆகும்

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் ஆஸ்திரேலியா

# 'பெரமுனவை விட்டு குதிரை ஓடிவிட்டது' பஸிலின் கருத்துக்கு அதாவுல்லா பதில்

## தாம் வெளியேறியதும் அக்கட்சி குப்புற வீழ்ந்ததாகவும் எகத்தாளம்

(த. தர்மேந்திரா)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியுடனான கூட்டிலிருந்து தமது தேசிய காங்கிரஸ் கட்சி விலகிவிட்டதாக அக்கட்சித் தலைவர் முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம்.தாவுல்லா தெரிவித்தார்.

"குதிரை எப்பொழுது அங்கிருந்து வெளியேறியதோ அவர்கள் 69 இலட்சத்தோடு குப்புறப் படுத்துவிட்டார்கள்" என்றார் அவர்.

உள்ளூராட்சி தேர்தலில் தேசிய காங்கிரஸின் குதிரை சின்னத்திலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வேட்பாளர்கள் இறக்கப்பட்டு உள் ளனர் என்று முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஸ செய்தியாளர்களுக்குத் தெரிவித்த கருத்துக்குப் பதிலாகவே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேசிய காங்கிரஸின் வேட்பாளர்களை ஊடகவியலாளர்களுக்கு அறிமுகம் செய்து




வைக் கின்ற சம்பிரதாயபூர்வ நிகழ்வு அக்கரைப்பற்று மாநகர சபையின் கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை காலை இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக அதாவுல்லா கலந்து கொண்டார். அப்பொழுதே பசில் ராஜபக்ஸவின் கருத்து சம்பந்தமாக ஊடகவியலாளர்கள் மாத்திரம் அன்றி வேட்பாளர்களும் அவரிடம் கேட்டார்கள். அதற்கு அதாவுல்லா தெரிவித்ததாவது:

தேசிய காங்கிரஸை பசில் ராஜபக்ஸவால் மறக்க முடியாது. அதே போல முஸ்லிம்களையும் பசில் ராஜபக்ஸவால் மறக்க முடியாது. ஏனென்றால் அவருக்கு நன்றி கடன் இருக்கின்றது. அவர் தேசிய பட்டியலில் முதன்முதல் பாராளு மன்றம் வந்தார் அல்லவா?

அதனால்தான் ஞாபக மறதியில் வாய் தடுமாறி சொல்லி இருக்கின்றார். எப்பொழுது குதிரை அங்கிருந்து வெளியேறியதோ அப்போதே அவர்கள் 69 இலட்சத்தோடு குப்புறப்படுத்தார்கள். ஆட்சியும் மாறி, செல்வாக்கையும் இழந்த நிலையில் மீண்டும் அவற்றை நினைத்து பார்க்கின்றார்கள் –என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இந்திய ரூபாவைப் பயன்படுத்தி வர்த்தக விரிவாக்கத் தீர்மானம்!

## மிலிந்த மொரகொட புதுடில்லியில் தெரிவிப்பு



கொழும்பின் பொருளாதார மீட்சி மூலோபாயத்தின் ஒரு பகுதியாக இந்திய ரூபாவை பயன்படுத்தி தீவு நாடு இந்தியாவுடனான தனது வர்த்தகத்தை விரிவுபடுத்துவதாக இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

இலங்கை நெருக்கடியின் போது இந்தியா விரைவாக செயற்பட்டதாகவும், 390 கோடி அமெரிக்க டொலர்களை தமது நாட்டுக்கு வழங்கியதாகவும் தூதுவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கையின் 75 ஆவது சுதந்திர நிகழ்வு, புதுடில்லியில் இடம்பெற்ற போது அதில் உரையாற்றிய உயர்ஸ்தானிகர் –

கொழும்புக்கு வரும் இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு ரூபே பொறிமுறையைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை தமது நாடு ஆலோசித்து வருவதாகவும், ரூபே பொறிமுறையை பயன்படுத்த தமது நாடு ஆவலுடன் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ரூபே பொறிமுறை, இலங்கைக்கு வரும் இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு எளிதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு இந்தியா வருமாறு இந்திய பிரதமர் மோடி முறைப்படி அழைப்பு விடுத்துள்ளார். எனவே அவர் விரைவில் இந்தியாவுக்கு வருவார் என நம்புவதாக மொரகொட கூறியுள்ளார்.

கொழும்பின் பாதுகாப்பு புதுடெல்லியின் பாதுகாப்பு என்றும், இரு நாடுகளும் ஒருவரை ஒருவர் கவனித்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். யாழ்ப்பாணக் கலாசார நிலையம், இந்தியாவின் முக்கியமான செயற்பாடு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தனித்திருந்த மூதாட்டி வீட்டில் காஸ் சிலின்டர் திருட்டு

தென்மராட்சி, ஜன 5

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மண்டுவில்–கிராம்புவில் கிராமத்தில் தனித்திருந்த மூதாட்டி வீட்டில் சனிக்கிழமை காலை திருட்டு இடம்பெற்றிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டில் இருந்த காஸ் சிலிண்டர், தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் தொலைபேசி ஆகியன திருடப்பட்டிருப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## 75 வருட கால சுதந்திர இலங்கையில் உண்மையான சுதந்திரம் எமக்குண்டா?

### இலங்கை சட்டத்தரணிகள் சங்க தலைவர் சாலிய பீரிஸ் கேள்வி



இலங்கை ஓர் சுதந்திர நாடாக அறிவிக்கப்பட்டு 75 வருடங்கள் கடந்துள்ள நிலையில், இலங்கையும் அதன் மக்களாகிய நாமும் உண்மையிலேயே சுதந்திரமாக இருக்கின்றோமா? என்று கேள்வி எழுப்பியுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், நாட்டின் உண்மையான சுதந்திரத்தைச் சீர்குலைக்கின்ற தவறான எண்ணங்கள், அச்சங்கள், ஒடுக்குமுறைகள், ஊழல் மற்றும் அடிமைத்தனம் என்பவற்றிலிருந்து இலங்கை விடுதலையடையும் அந்த நாளை எதிர்நோக்கிக் காத்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு, மருதானையில் அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரகப்போராட்டத்தின் மீது வெள்ளிக்கிழமை நள்ளிரவு பொலிஸாரால் நீர்த்தாரைப்பிரயோகம் நடத்தப்பட்டதுடன் போராட்டக்காரர்கள் அங்கிருந்து கலைக்கப்பட்டனர்.

இச் சம்பவம் தொடர்பில் தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், அதில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்–

கண்டிய பிரகடனத்தில் கையெழுத்திடப்பட்டு 133 வருடங்களின் பின்னர், 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இலங்கை ஓர் சுதந்திர நாடாக அறிவிக்கப்பட்டது.

அவ்வாறு அறிவிக்கப்பட்டு 75 வருடங்கள் கடந்துள்ள நிலையில், இலங்கையும் அதன் மக்களாகிய நாமும் உண்மையிலேயே சுதந்திரமாக இருக்கின்றோமா?

இலங்கையின் உண்மையான சுதந்திரத்தை சீர்குலைக்கின்ற மற்றும் மக்களின் மனித மாண்பைப் பறிக்கின்ற தவறான எண்ணங்கள், அச்சங்கள், ஒடுக்குமுறைகள், ஊழல் மற்றும் அடிமைத்தனம் என்பவற்றிலிருந்து இலங்கை விடுதலையடையும் அந்த நாளை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றோம். – என்று குறிப்பிட்டுள்ளார்.

## நல்லூர்கந்தன் ஆலய நெற்புதிர் அறுவடை





நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் நெற்புதிர் அறுவடை விழா நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்றுள்ளது.

தைப்பூசத்தினத்துக்கு முதல் நாள் கொண்டாடப்படும் இந்தப் பண்பாட்டு விழாவில் கோவில் அறங்காவலரும் சிவாச்சாரியாரும் முதலாவது புதிரை அறுவடை செய்ய ஆலயத்துக்குச் சொந்தமான மட்டுவிலில் உள்ள வயலுக்குச் செல்வார்கள்.

அந்த வயலில் அறுவடை செய்யும் நெல்லில் இருந்து அமுது தயாரித்து கந்தனுக்கு படையல் செய்து பூசைகள் இடம்பெறும் , அதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கும் அமுது வழங்குதல் மரபாக பண்பாட்டு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இந்தப் புதிர் விழா 289 ஆவது ஆண்டாக இந்த வருடம் கொண்டாடப்பட்டமையும் குறிப்பித்தக்கது.

## திருமலையில் வீதியோரத்தில் சிசுவொன்று உயிருடன் மீட்பு!

திருகோணமலை –கின்னியா, சர்தாபுர வீதியில் பசளை உறையில் போடப்பட்டிருந்த நிலையில் ஆண் சிசுவொன்று மீட்கப்பட்டுள்ளது.

இதன்போது பசளை உறையில் வெள்ளைத் துணியால் சுற்றப்பட்ட நிலையில் சிசுவொன்று இருப்பதை ஒரு குடும்பத்தினர் அவதானித்துள்ளனர். இதனையடுத்து அந்தக் குடும்பத்தினர் சிசு கிடந்த இடத்துக்கு அருகில் உள்ளவர்களை அழைத்து சிசுவை கைப்பற்றினர் எனவும் தெரியவருகின்றது. பின்னர் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த உப்புவெளி பொலிஸார் கைப்பற்றப்பட்ட சிசுவை திருகோணமலை பொது வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

மேலும் சிசு பற்றிய விவரங்கள் தெரியாத பட்சத்தில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சாய்ந்தமருதில் குருதிக்கொடை

(எஸ்.அஷ்ரப்கான்)

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது கலாசசார மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் சிலோன் மீடியா போரம், ஜாமிஉல் இஸ்லாஹ் ஜும்ஆப் பள்ளிவாசல் ஆகியவற்றின் அனுசரணையில் ஒரு துளி இரத்தம் பலரது உயிர் காக்கும் எனும் தொனிப்பொருளில் குருதிக்கொடை முகாம் சனிக்கிழமை இடம்பெற்றது.

சாய்ந்தமருது வொலிவேரியன் கலாசார மத்திய நிலையத்தில் காலை 9.00 மணி முதல் பலர் இந்த முகாமில் குருதி வழங்கினர்.

நிலையத்தின் பொறுப்பதிகாரி யூ.கே. எம்.றிம்ஸான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் கலந்துகொண்டார்.

கௌரவ அதிதிகளாக நீதிக்கான மையத்தின் தலைவர் சட்டத்தரணி சஹ்பி எச்.இஸ்மாயில், சிலோன் மீடியா போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ.மஜீத், கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை குருதி வங்கி பொறுப்பதிகாரி வைத்தியர் தேவரஞ்சனி, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள், கலாசார மத்திய நிலைய அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு வவுனியா பண்டாரவன்னியனுக்கு மலர்மாலை!



இலங்கையின் சுதந்திர தினத்தில் வவுனியாவில் அமைந்துள்ள பண்டார வன்னியனுக்கு மலர்மாலை அணிவிப்பு இடம் பெற்றுள்ளது.

நேற்று (சனிக்கிழமை) வவுனியா பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலக வாயிலில் அமைந்துள்ள பண்டாரவன்னியன் நினைவுத்தூபிக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வவுனியா பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் பிரியதர்ஷினி சஜீவன் மற்றும் கிராம அலுவலர்கள், வவுனியா பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## எங்களுக்கென்று சுதந்திரம் கிடைக்காததால் அதைக் கொண்டாடுவதற்கு மனம் விடவில்லை!

### ஏழு வருடமாகத் தான் அதில் பங்கேற்பதில்லை என்கிறார் அங்கஜன்



70 வருடமாக கதைக்கின்ற போதிலும் இதுவரை எங்களுக்கென்று சுதந்திரம் கிடைக்காத நிலையில் அதைக் கொண்டாடுவதற்கு மனம் விடவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று (சனிக்கிழமை) கிளிநொச்சியில் இடம்பெற்ற வேட்பாளர் அறிமுக நிகழ்வைத் தொடர்ந்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் தெரிவிக்கையில் -


நான் ஏழு வருடங்களுக்கு மேலாகத் தொடச்சியாக சுதந்திர தின நிகழ்வுகளில் கலந்து கொள்வதில்லை.

ஆனால் இவ்வருடம் 75 ஆவது வருட கொண்டாட்டத்தை கொண்டாடிக் கொண்டிருக்கும் பொழுது, நாங்கள் 70 வருடமாகக் கதைக்கின்ற போதிலும் இதுவரை எங்களுக்கென்று சுதந்திரம் கிடைக்காத நிலையில் அதைக் கொண்டாடுவதற்கு மனம் விடவில்லை.

ஆனாலும் இதனை ஒரு கரிநாளாக கூறி, இன்னுமொரு தரப்பின் அரசியல் யுத்திக்கு ஆதரவாக நான் செயற்படவும் இல்லை. ஏனெனில், பொருளாதார நெருக்கடியான காலத்தில் ஹர்த்தால் மூலம் மேலும் எமது மக்களின் பொருளாதாரமே பாதிக்கப்படுகிறது.

இன்றைய ஒரு நாள் வருமானத்தை நம்பி இருக்கும் பலர் உள்ளனர். ஹர்த்தால் எனும் போர்வையில் அதனையும் தடுத்து நிறுத்துவது நியாயமற்ற செயற்பாடாகப் பார்ப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# விராட், ரோஹித் பிளவுகள் இந்திய அணியில் இருந்தன







சமூக ஊடகங்களின் வரவினால் உலகில் நட்புகள் உருவாகவும் செய்கின்றன, பல ஆண்டுகால நட்புகளும் துயரத்திலும் முடிந்து விடுகின்றன. இது சாதாரண மனிதர்களுக்கே நிகழ்கிறது எனும்போது சூப்பர் ஸ்டார்களான ரோஹித்சர்மா,விராட்கோலிக்கும்இடையேயான நட்பிலும் நிகழாதா? அப்படித்தான் நிகழ்ந்தது என்று இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளர் ஆர்.ஸ்ரீதர் தன் கோச்சிங் பியாண்ட் என்ற புதிய புத்தகத்தில் இந்திய அணியில் கும்பல்முரண்பாடுபற்றிய அதிர்ச்சித்தகவலை வெளியிட்டுள்ளார்.

ரவி சாஸ்திரியினால்தான் அந்த கும்பல் மனோபாவம் முடித்து வைக்கப்பட்டதாக ஆர்.ஸ்ரீதர் எழுதியுள்ளார்.

அவர் தனது புத்தகத்தில் இது பற்றித் தெரிவித்துள்ளதாவது:

2019 உலகக்கோப்பை அரையிறுதி தோல்விக்கு பிறகே நிறைய செய்திகள் விமர்சனப்பூர்வமாக எழுந்தன. அணியில் ரோஹித் முகாம் கோலி முகாம் என்று இரண்டு பிரிவுகளாக வீரர்கள் கும்பல்கள் அமைத்திருப்பதாக எங்களுக்கு செய்தி எட்டியது. சமூக ஊடகத்தில் ஒருவர் இன்னொருவரை பின் தொடர்வதை நிறுத்தி விட்டார் என்பது பெரிய வியமாகிக் கொண்டிருந்தது. இந்தப் போக்கை வளரவிட்டால் மோசமாகிவிடும் என்ற நிலைதான்.

உலகக் கோப்பை முடிந்த பிறகு யுஎஸ்க்குச் சென்றோம் அங்கு மே.இ.தீவுகளுக்கு எதிராக ரி20 தொடர். அப்போது ரோஹித்-கோலி மோதலை அறிந்த பயிற்சியாளர் ரவி சாஸ்திரி இருவரையும் தன் அறைக்கு அழைத்து தெளிவுபடுத்தினார். அதாவது இந்திய கிரிக்கெட் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமெனில் இருவரும் இணைந்து செயல்படவேண்டும் என்று வலியுறுத்தினார். 'சமூக ஊடகத்தில் நடந்தது நடந்ததாக இருக்கட்டும்.

நீங்கள் இருவரும் மூத்த கிரிக்கெட் வீரர்கள் எனவே இதனை உடனே நீங்கள் நிறுத்தவேண்டும். நீங்கள் இருவரும் இந்த ஆரோக்கிய மற்ற போக்கைப் பின்னுக்குத்தள்ளி விட்டு அணியின் முன்னேற்றத்திற்காக இணைந்து செயல்பட வேண்டும் என்று ரவிசாஸ்திரி திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

சாஸ்திரி சமாதானம் செய்யவில்லை எனில் இந்த விவகாரம் நீண்ட கால சேதத்தை ஏற்படுத்தி விடும் என்ற கவலைகள் இருந்தன. சாஸ்திரி இல்லாவிட்டால் நிச்சயம் நிலைமை இப்போது போல் இருந்திருக்காது. ரவி சாஸ்திரியின் தலையீடு மிகவும் உடனடியாக நடந்ததால் வியங்கள் தேறின. இருவரையும் அழைத்து நேருக்கு நேர் பேச வைப்பது என்பதில் ரவி சாஸ்திரி நேர விரயம் செய்யவில்லை. இருவருமே இதை உணர்ந்தனர். அணிதான் அனைத்திற்கும் மேலானது என்பதை உணர்ந்தனர், அவர்களிடையேயான உறவும் மேம்பட்டது. இவ்வாறு எழுதியுள்ளார் ஆர்.ஸ்ரீதர்.

# ஆஸி. அணியின் அணுகுமுறை குழப்பமாகவே உள்ளது – ரெய்னா




இந்தியாவுக்கு எதிராக டெஸ்ட் தொடரில் பயிற்சி ஆட்டங்களில் விளையாடாமல் பந்துவீச்சாளர்களை பந்துவீசச் செய்து பயிற்சி பெற்று டெஸ்ட் தொடரில் களமிறங்கவுள்ள ஆஸ்திரேலிய அணியின் முடிவு குழப்பமளிப்பதாக இந்திய அணியின் முன்னாள் வீரர் சுரேஷ் ரெய்னா தெரிவித்தார்.

இந்தியா மற்றும் ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான பார்டர்-கவாஸ்கர் டெஸ்ட் தொடர் பெப்ரவரி 9 ஆம் திகதி நாக்பூரில் தொடங்குகிறது. 4 போட்டிகள் கொண்ட இந்த டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்கானஆஸ்திரேலிய அணி இந்தியாவை வந்தடைந்து பெங்களூருவில் பயிற்சி மேற்கொண்டு வருகிறது. ஆஸ்திரேலிய அணி இந்திய அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் ரவிச்சந்திரன் அஸ்வின் போல பந்து வீசும் பரோடா அணியின் மகேஷ் பித்தியா என்ற பந்துவீச்சாளரை வைத்து சுழல் பந்துவீச்சுக்கு எதிரானபயிற்சியில்ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில், இந்தியாவுக்கு எதிராக டெஸ்ட் தொடரில் பயிற்சி ஆட்டங்களில் விளையாடாமல் பந்துவீச்சாளர்களை பந்துவீசச் செய்து பயிற்சி பெற்று டெஸ்ட்தொடரில்களமிறங்கவுள்ள ஆஸ்திரேலிய அணியின் முடிவு குழப்பமளிப்பதாக இந்திய அணியின் முன்னாள் வீரர் சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார்.

காவலர் குடும்ப நலச் சமூகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட மின் ஒலிம்பிக்ஸ் என்ற ஆண்டு விழா தின நிகழ்வில் கலந்து கொண்டு பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் சுரேஷ் ரெய்னா தெரிவித்ததாவது: ஆஸ்திரேலிய அணி ஒரு நல்ல வாய்ப்பை இழந்ததாகத் தெரிகிறது. நான் பயிற்சி ஆட்டங்களில் விளையாடியுள்ளேன். அவை மிகவும் முக்கியமானவை. இந்தியாவில் உள்ள ஆடுகளங்களின் தன்மை குறித்து அறிய வேண்டுமென்றால் அவர்கள் பயிற்சி ஆட்டங்களில் ஆடியிருக்கவேண்டும். பயிற்சி ஆட்டங்களில் விளையாடினால் மட்டும் தான் அவர்களுக்கு இந்திய ஆடுகளங்களின் தன்மை புரியும். இந்த 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணி சிறப்பாகச் செயல்படும் என்ற நம்பிக்கை உள்ளது.

நீண்ட நாட்களுக்குப் பிறகு ரவீந்திர ஜடேஜா அணிக்குத் திரும்பியுள்ளார். அவரது வருகை இந்திய அணிக்குப் பலமாக அமையும். இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர்கள் ரவிச்சந்திரன் அஸ்வின், அக்சர் படேல் சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர். விராட் கோலி மற்றும் ரோஹித் சர்மா சிறப்பான திறனில் உள்ளனர். அதனால் இந்த டெஸ்ட் தொடர் சுவாரசியமானதாக இருக்கப் போகிறது.

இந்திய அணி அனைத்து வடிவிலான கிரிக்கெட் போட்டிகளிலும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அது ஒரு மிகப் பெரிய சாதனை. பெண்களுக்கான ஐபிஎல் பிரீமியர் லீக்கினை இந்திய கிரிக்கெட் சபை நடத்தவுள்ளது ஒரு சிறப்பான முடிவு. அதனை நான் வரவேற்கிறேன்.

இந்த முடிவின் மூலம் கிரிக்கெட் போட்டிகளில் பெண்கள் பயனடைவர் –என்றார்.

# ஆசிய கோப்பை தொடருக்காக பாக். செல்லாது இந்திய அணி

ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடரில் விளையாட இந்திய அணி பாகிஸ்தான் பயணிக்காது என்ற நிலைப்பாட்டில் இந்திய கிரிக்கெட் சபை உறுதியாக இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஆசிய கோப்பை தொடரை எங்கே நடத்துவது என்பது குறித்து முடிவுசெய்ய, பஹ்ரைனில் நடக்கும் ஆசிய கிரிக்கெட் கவுன்சில் கூட்டத்திற்கு இந்திய கிரிக்கெட் சபைச் செயலாளரும், ஆசிய கிரிக்கெட் கவுன்சிலின் (ஏசிசி) தலைவருமான ஜெய் ா சென்றுள்ளார்.

ஆசியக் கோப்பை போட்டியை நடத்தும் உரிமையை தீர்மானிப்பதற்காக, பாகிஸ்தான் கிரிக்கெட் கவுன்சில் தலைவர் நஜம் சேதி அழைத்ததன் பேரில் ஜெய் ா கலந்துகொண்டார்.

இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் பாகிஸ்தானில் நடைபெறுவதாக திட்டமிடப்பட்டிருந்த ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டியை பொதுவான திடலில் நடத்தவேண்டும் என இந்தியா தரப்பில் கூறப்பட்டு வந்த நிலையில், தற்போது அதற்கான விவாகரம் பேசி முடிவு செய்யப்படவுள்ளது.

பாகிஸ்தானில் ஆசியக் கோப்பையை நடத்துவது இல்லை என்று இந்திய கிரிக்கெட் உறுதியாக இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இந்திய டெஸ்ட் தொடரில் ஆஸி. வெல்ல வாய்ப்பு

## இப்படிச் சொல்கிறார் சாப்பல்




இந்தியாவில் நடைபெறவுள்ள பார்டா-கவாஸ்கா கோப்பைக்கான டெஸ்ட் தொடரை வெல்ல ஆஸி. அணிக்கு வாய்ப்புள்ளது என துடுப்பாட்ட ஜாம்பவான் கிரேக் சாப்பல் கூறினார்.

இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடா நாகபுரியில் 9ஆம் திகதி தொடங்குகிறது. ஆஸ் கோப்பை தொடா போல், ஆஸி.-இந்திய அணிகளுக்கு இடையே பார்டா-கவாஸ்கா கோப்பை போட்டி கௌரவமிக்கதாக உள்ளது. இந்த நிலையில் இந்தியாவில் டெஸ்ட் தொடரை கைப்பற்றி ஆஸி. கைப்பற்றி 19 ஆண்டுகள் ஆகின்றது.

இதுதொடாபாக ஜாம்பவான் சாப்பல் தெரிவித்ததாவது:

இந்தத் தொடரில் இந்தியாவுக்கு பாதிப்பு ஏற்படும் சூழல் உள்ளது. குறிப்பாக வேகப் பந்துவீச்சாளர் ஜஸ்ப்ரீத் பும்ரா, இளம் வீரா ரிப் பந்த் இல்லாதது பின்னடைவாகும். முதன்முறையாக சொந்த மண்ணில் இந்தியா வலுகுறைந்து உள்ளது. விராட் கோலியை தான் அதிகம் சார்ந்திருப்பா. பிங்கா ஸ்பின்னா ஆஷ்டன் அகா, நாதன் லயானுடன் இணைந்து பந்துவீசினால் இந்திய துடுப்பாளர்களைச் சமாளிக்கலாம் என்றார்.

2017இல் கடைசியாக நடைபெற்ற தொடரில் புணேயில் பெரிய வெற்றியை ஆஸி. பெற்றிருந்தது. ஆனால் 1-2 என தொடரை இழந்தது.

# ஒரே ஓவரில் 26 ஓட்டங்கள் விளாசி அசத்திய பொலார்ட்




அபுதாபியில் நடைபெற்றுவரும் இஐ ரி20 போட்டியில் மும்பை எமிரேட்ஸ் மற்றும் அபுதாபி நைட் ரைடர்ஸ் அணிகள் விளையாடிய போட்டியில் பொலார்ட் அட்டகாசமாக விளையாடினார்.

மும்பை எமிரேட்ஸின் அணித் தலைவரான பொலார்ட் ரஸல் வீசிய ஒரு ஓவரில் 26 ஓட்டகளை அடித்து அசத்தினார். 17 பந்துகளில் 43 ஓட்டங்களை அடித்து அணியின் வெற்றிக்கு வித்திட்டார். ஆட்டநாயகன் விருதினையும் பெற்றார்.

மும்பை எமிரேட்ஸ் 20 ஓவரில் 180/4 ரன்களை எடுத்தது. இதில் மொஹமது வசீம் 60 ஓட்டங்களை எடுத்தார். பொலார்ட் 43 ஓட்டங்கள். அடுத்து ஆடிய அபுதாபி நைட் ரைடர்ஸ் அணி 19.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 162 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

பிராவோ 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தி அசத்தினார்.

இந்த வெற்றியின் மூலம் பொலார்ட் அணி ப்ளே-ஆஃப்க்கு தேர்வாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் தமிழர்கள் உயிர் நீத்தமைக்கான காரணம் தொடர்பான பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை

## பிரிட்டனின் அனைத்துக் கட்சி நாடாளுமன்ற குழு வலியுறுத்தல்

இலங்கை அதன் 75 வருடகால வரலாற்றில் சுமார் பத்தாயிரம் தமிழர்களின் இழப்பை சந்தித்திருக்கிறனர். இருப்பினும், அந்த இழப்புக்கான அடிப்படைக் காரணம் இன்னமும் தீர்க்கப்படாமலேயே இருக்கிறதுஎன்றுசுட்டிக்காட்டியிருக்கும் தமிழர்களுக்கான பிரிட்டனின் அனைத்துக்கட்சி நாடாளுமன்ற குழு, தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நிலையான அரசியல் தீர்வொன்றை இலங்கை கண்டடைவதை உறுதி செய்யுமாறு பிரிட்டன்அரசாங்கத்திடமும்சர்வதேச சமூகத்திடமும் வலியுறுத்தியுள்ளது.

பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்மற்றும்பிரிட்டன்வாழ் தமிழர்களை உள்ளடக்கிய தமிழர்களுக்கான அனைத்துக்கட்சி நாடாளுமன்றக் குழுவால் இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு –

வடக்கு, கிழக்கில் தொடர்ந்து நிகழும் இராணுவமயமாக்கல், போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை என்பன தொடர்பில் நீதி, பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படாமை, தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய அரசியல் தீர்வை அடைவதில் ஏற்பட்டுள்ள தோல்வி ஆகிய விடயங்களை முன்னிறுத்தி இலங்கையின் 75ஆவது சுதந்திர தின கொண்டாட்டத்தைப் புறக்கணித்துள்ள வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள், தமிழ் அரசியல் தலைவர்கள் மற்றும் அரசியல் கட்சிகளுடனான எமது ஒருமைப்பாட்டை வெளிப்படுத்துகின்றோம்.

அதேவேளை இலங்கை அரசாங்கத்தின் அதிகரித்துவரும் வன்முறைகள் மற்றும் ஒடுக்குமுறைகளுக்கு முகங்கொடுத்திருக்கும் போராட்டக்காரர்கள் தொடர்பில் நாம் எமது கரிசனையையும் வெளிப்படுத்துகின்றோம். இலங்கை மிகத் தீவிரமான பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மைக்கு முகங்கொடுத்திருக்கும் சூழ்நிலையிலேயே இம்முறைசுதந்திரதினம்கொண்டாடப்படுகின்றது.

உணவு, மருந்து, எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதில் பொது மக்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கின்ற வேளையில், சுதந்திர தின நிகழ்வுகளுக்காக இலங்கை அரசாங்கம் 20 கோடி ரூபாவை செலவிட்டுள்ளது.

இலங்கையின் அரசகட்டமைப்பு அதன் மக்களின் அடிப்படை தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத நிலையில் இருக்கின்ற போதிலும், ஏற்கனவே வலிந்து காணாமலாக்கப்படல் தொடர்பான சம்பவங்கள், காணி அபகரிப்பு மற்றும் ஏனைய மனித உரிமை மீறல்கள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு வாழ் தமிழ்மக்கள் மீதான அடக்குமுறைகள் இன்னமும் தொடர்கின்றன.

சுதந்திர தின நிகழ்வில் இராணுவ அணிவகுப்பு இடம்பெறும் அதேசமயம், வடக்கு, கிழக்கில் மேலோங்கியுள்ள இராணுவமயமாக்கல் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

சிவில் மக்களின் செயற்பாடுகளில் தொடர்புபட முடியுமென பிரிட்டனில் அனுமதிக்கப்படும் எண்ணிக்கையை விடவும் இரு மடங்கு இராணுவத்தினர் இலங்கையில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அதேவேளை, தமிழ் மக்களுக்கு எதிரான மீறல்கள், கண்காணிப்புக்கள், ஒடுக்குமுறைகள் என்பனவும் தொடர்கின்றன. அதுமாத்திரமன்றி, தமிழ் மக் கள் பொருளாதாரத்திலிருந்து புறந்தள்ளப்படுவதுடன் அவர்களின் காணி கள் அபகரிக் கப்பட்டு, வணக்கஸ் தலங்கள் அழிக்கப்படுகின்றன. இவற்றுக்கு மத்தியில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவு கள் தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்து கொள்வதற்காகத் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றார்கள்.

கடந்த 75 வருட காலமாக இலங்கையின் அரசாங்கங்கள் நியாயமானதும் சமத்துவமானதுமான ஆட்சி நிர்வாகம் மற்றும் கொள்கை உருவாக்கம் ஆகியவற்றுக்கப்பால் சிங்கள பௌத்த தேசிய வாதத்தை மேலோங்கச் செய்வதற்கே அதிக முக்கியத்துவம் வழங்கி வந்திருக்கின்றன. அது நாட்டில் இனப் பிரச்சினை தோற்றம் பெறுவதற்கும், பொருளாதார நெருக்கடி மற்றும் ஸ்திரமற்ற தன்மை என்பன உருவாகுவதற்கும் வழி வகுத்துள்ளது.

இலங்கை அதன் 75 வருடகால வரலாற்றில் பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் இழப்பை சந்தித்திருக்கின்றது. இருப்பினும், அந்த இழப்புக்கான அடிப்படை காரணம் இன்னமும் தீர்க்கப்படாமலேயே இருக்கின்றது.

எனவே, நியாயமான ஆட்சி நிர்வாகத்தை உறுதிப்படுத்துவதுடன், ஸ்திரத்தன்மை மற்றும் சுபீட்சத்தை நோக்கிய பாதையில் நாட்டை முன்னகர்த்திச் செல்லக்கூடியவாறாக இலங்கையின் அரச கட்டமைப்பு மாற்றமடைய வேண்டும் என்பது தெளிவாகிறது.

அந்த வகையில், இலங்கையில் இடம்பெற்ற மனித குலத்துக்கு எதிரான மிக மோசமான மீறல்கள் மற்றும் இனப்படுகொலை என்பன தொடர்பில் சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறையொன்றை உறுதி செய்யுமாறு எமது அரசாங்கத்திடமும் ஏனைய சர்வதேச பங்காளிகளிடமும் கேட்டுக்கொள்கின்றோம். அதேபோன்று தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய நிலையான அரசியல் தீர்வொன்றை இலங்கை கண்டடைவதை உறுதிப்படுத்துமாறும் சர்வதேச சமூகத்திடம் வலியுறுத்துகின்றோம் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இலங்கையின்......





(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

–இவ்வாறுஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க தெரிவித்தார்.

75 ஆவது சுதந்திரக் கொண்டாட்டத்தை முன்னிட்டு இலங்கையின் கிராமப்புறங்களில் பொதுப் போக்குவரத்து சேவையை வலுப் படுத்த இந்திய அரசால் இலங்கைக்கு வழங்கப் படவுள்ள 500 பஸ்களில், 50பஸ்கள்ஜனாதிபதிஅலுவலகத்தில் இன்று முற்பகல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அடையாள ரீதியிலாகக் கையளிக்கப்பட்டன.

இதற்கான ஆவணங்களை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பக்லே, ஜனாதிபதியிடம் கையளித்தார்.


நாடாக்களை வெட்டி இரண்டு பஸ்களை திறந்து வைத்த ஜனாதிபதி, இந்தியா கையளித்த பஸ்களைப் பார்வையிட்டார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கருத்துரைத்தார்.

போக்குவரத்து,நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன இந்தியஅரசிடம்விடுத்தவேண்டுகோளுக்கு இணங்க, 75ஆவது தேசியசுதந்திரக் கொண்டாட்டத்துடன் இணைந்ததாக, இந்தப் பஸ்களை வழங்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் முதல் தொகுதியாக 75 பஸ்கள் அண்மையில் இலங்கை அரசிடம் ஒப்படைக்கப்பட்டன. மேலும் 40 பஸ்களின் பதிவு தற்போது நடைபெற்று வருகின்றது. இதன்படி, இலங்கைக்கு இதுவரை165பஸ்கள்வழங்கப்பட்டுள்ளதுடன், 500 பஸ்கள் வழங்கும் திட்டம் 2023 மார்ச் மாத இறுதிக்குள் பூர்த்தி செய்யப்பட வுள்ளது.

கிராமிய மக் களின் போக்குவரத்துத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இந்த பஸ்கள் நாடளாவிய ரீதியில்உள்ளஅனைத்துடிப்போக்கள் ஊடாகவும் பயன்பாட்டுக்கு விடுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

போக்குவரத்து இராஜாங்க அமைச் சர் லசந்த அழகியவண்ண, இராஜாங்க அமைச் சர் திலும் அமுனுகம, நாடாளுமன்ற உறுப்பினர்களான ராதிகா விக்கிரமசிங்க, முதிதா பிராந்தி மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர், மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் தலைவர், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# இலங்கைக்கு கடன் உதவி வழங்குக; நாணய நிதியத்திடம் சீனா கோரிக்கை



நெருக்கடியை சமாளிக்க இலங்கைக்கு கடன் உதவி வழங்குமாறு சர்வதேச நாணய நிதியத்திடம் சீனா அழைப்பு விடுத்துள்ளது.

கடன் வழங்குவதைத் துரிதப்படுத்தும் தொடர்புடைய நிதி நிறுவனங்களுக்கு சீனா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றும் சீனாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை நிலைமையை கண்காணிக்கவும், அதன் கடன் சுமையைக் குறைப்பதற்கும் மற்றும் நிலையான அபிவிருத்தியை அடைவதற்கும் சீனா உதவும் எனத் தெரிவித்துள்ளார்.

இதற்காகதொடர்புடையநாடுகள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களுடன் இணைந்து ஒரு நேர்மறையான பங்கை வகிப்பதாக சீனாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஒருநட்புநாடுமற்றும்உண்மையான நண்பன் என்ற வகையில், சீனா இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு இயன்றளவு உதவிகளைவழங்கிவருவதாவும் கூறியுள்ளார்.

# பொதுநலவாயக் குடும்பத்தின் சிறப்புமிக்க ஒருபகுதி இலங்கை

## பற்றீஸியா ஸ்கொட்லன்ட் பெருமிதம்



நீங்கள் சிறப்பு வாய்ந்த பொது நலவாயக் குடும்பத்தின் ஒரு பகுதி என்பதற்காகவே தாம் இலங்கைக்கு வந்துள்ளதாக பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் பற்றீஸியா ஸ்கொட்லன்ட் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளைஇலங்கைதற்போது முகங்கொடுத்திருக்கும்நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அவசியமான அனைத்துவித ஒத்துழைப்புக்களையும் வழங்கத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் குடும்பம் என்ற ரீதியில் நாம் ஒருவருக்கொருவர் பொறுப்புக்கூற வேண்டும் என்று குறிப்பிட்ட அவர,; உலகளாவிய அமைப்புகளை விரிவுபடுத்தும் நெருக்கடிகளின் சிக்கலான இடத்தில் அனைவரும் பிணைக் கப்பட்டுள்ளதாகவும் பற்றீஸியா ஸ்கொட்லன்ட் குறிப்பிட்டுள்ளார்.

# வர்த்தகம், முதலீடு, மேம்பாட்டு உதவிகள் தொடர்பாக இலங்கை – ஜப்பான் பேச்சு



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஜப்பானின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் டேக்கி ஸுன்சுகேவுடன் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கலந்துரையாடியுள்ளார்.

ஜப்பானியஅமைச்சருடன்நேற்று(சனிக்கிழமை) கொழும்பில் பயனுள்ள கலந்துரையாடலை நடத்தியதாக அமைச்சர் சப்ரி தெரிவித்தார்.

வர்த்தகம், முதலீடு மற்றும் மேம்பாட்டு உதவிகள் மற்றும் பலதரப்பு ஒத்துழைப்பு தொடர்பாக இரு தரப்பு பேச்சு இடம்பெற்றதாக அவர் கூறினார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.02.2023 இல் வெளியிடப்பெற்றது.